இதயம் மேட்ரிமோனிக்கு வாங்க
சந்தோசமா கல்யாணம் பண்ணிக்கிட்டு போங்க
இதயம் மேட்ரிமோனி
அறிமுக சலுகை
பதிவு இலவசம்
www.IdhayamMatrimony.com
Email: admin@idhayammatrimony.com

தின பூமி
thinaboomi.com

இதயம் மேட்ரிமோனிக்கு வாங்க
சந்தோசமா கல்யாணம் பண்ணிக்கிட்டு போங்க
இதயம் மேட்ரிமோனி
அறிமுக சலுகை
பதிவு இலவசம்
www.IdhayamMatrimony.com
Email: admin@idhayammatrimony.com





**ஐக்கிய அரபில் பெய்த கனமழை: வெள்ள நீரில் மிதந்த துபாய் சர்வதேச விமான நிலையம்**


...2-ம் பக்கம்

**திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஆர்ஜித சேவை டிக்கெட் இன்று வெளியீடு**

...3-ம் பக்கம்

**டி-20 உலகக்கோப்பை அணியில் இடம்பெறுவாரா ஹர்திக் பாண்டியா? பி.சி.சி.ஐ. போட்ட திடீர் உத்தரவு**

...7-ம் பக்கம்





● பாராளுமன்ற தேர்தலையொட்டி சேலம் கோட்டை மாரியம்மன் கோவில் உள்ளிட்ட பகுதிகளில் சேலம் தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் விக்னேசிற்கு இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்திடுமாறு பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி பிரச்சாரம் மேற்கொண்டார்.

## அரசியல் கட்சி தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பு:

# தமிழகத்தில் பாராளுமன்ற தேர்தல் பிரசாரம் ஓய்ந்தது

### ஒரே கட்டமாக நாளை வாக்குப்பதிவு

சென்னை, ஏப். 18-

பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு கடந்த ஒரு மாதமாக நடைபெற்ற அரசியல் கட்சிகளின் தேர்தல் பிரசாரம் நேற்று மாலை 6 மணியுடன் ஓய்ந்தது. தமிழகம் உள்ளிட்ட 21 மாநிலங்களில் நாளை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

**4 முனைப்போட்டி...**

பாராளுமன்ற தேர்தல் நாடு முழுவதும் வரும் 19-ம் தேதி தொடங்கி ஜூன் 1ம் தேதி வரை ஏழு கட்டங்களாக நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் ஜூன் 4ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. தமிழ்நாட்டில் 39 தொகுதிகள், புதுச்சேரி என மொத்தம் 40 தொகுதிகளிலும் நாளை (19ம் தேதி) ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது. தமிழ்நாட்டில் தி.மு.க. கூட்டணி, அ.தி.மு.க. கூட்டணி, பா.ஜ.க. கூட்டணி, நாம் தமிழர் என 4 முனைப் போட்டி ஏற்பட்டுள்ளது.

**தி.மு.க. தலைமையில்..**

தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் தி.மு.க., காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி ஆகியவை போட்டியிடுகின்றன. அ.தி.மு.க. தலைமையிலான அணியில் அ.தி.மு.க., தே.மு.தி.க., எஸ்.டி.பி.ஐ. மற்றும் புதிய தமிழகம் ஆகிய கட்சிகள் போட்டியிடுகின்றன.

**பா.ஜ.க. தலைமையில்..**

பா.ஜ.க. தலைமையிலான கூட்டணியில் பா.ஜ.க, பா.ம.க., த.மா.கா, அ.ம.மு.க., முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான அ.தி.மு.க. தொண்டர் உரிமை மீட்புக்குழு, புதிய நீதிக்கட்சி, ஐ.ஜே.கே., தமிழக மக்கள் முன்னேற்ற கழகம், இந்திய மக்கள் கல்வி முன்னேற்ற கழகம் ஆகிய கட்சிகள் போட்டியிடுகின்றன.

**1,749 பேர் மனு தாக்கல்**

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதையடுத்து கடந்த 20ம் தேதி வேட்புமனு தாக்கல் தொடங்கியது. அரசியல் கட்சியினர், சுயேச்சைகள் என பலர் வேட்புமனு தாக்கல் செய்தனர். தேர்தல் வேட்புமனு தாக்கல் கடந்த 27ம் தேதி மாலை 3 மணியுடன் நிறைவடைந்தது. தமிழ்நாட்டில் மொத்தம் 1,749 பேர் வேட்புமனு தாக்கல் செய்திருந்தனர்.

**950 பேர் போட்டி...**

அதில், 664 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இறுதியில் தமிழகத்தில் 39 தொகுதிகளில் 1 ஆயிரத்து 85 பேரின் வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டன. வேட்புமனுக்களை திரும்பப்பெற கடந்த 30ம் தேதி மாலை 5 மணி வரை அவகாசம் கொடுக்கப்பட்டிருந்த நிலையில் 135 பேர் தங்கள் வேட்புமனுக்களை திரும்பப் பெற்றனர். இதையடுத்து, தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 39 தொகுதிகளில் 950 பேர் போட்டியிடுகின்றனர். இதில், 874 பேர் ஆண்கள், 76 பேர் பெண்கள் ஆகும்.

**6 மணியுடன் நிறைவு...**

இதையடுத்து, தேர்தல் பரப்புரை தீவிரமடைந்தது. தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜ.க., நாம் தமிழர், காங்கிரஸ், பா.ம.க., தே.மு.தி.க., உள்பட பல்வேறு கட்சியினர் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டனர். பிரதமர் மோடி, ராகுல்காந்தி, மு.க.ஸ்டாலின், எடப்பாடி பழனிசாமி, அண்ணாமலை, சீமான், அன்புமணி ராமதாஸ் உள்பட பல்வேறு தலைவர்களும் தீவிர பரப்புரையில் ஈடுபட்டனர். இந்நிலையில், தமிழ்நாட்டில் கடந்த 4 வாரங்களாக நடைபெற்று வந்த அரசியல் கட்சிகளின் அனல் பறந்த பிரசாரம் நேற்று மாலை 6 மணியுடன் ஓய்ந்தது. மேலும் முதல் கட்ட தேர்தல் நடைபெறும் 21 மாநிலங்களிலும் பிரசாரம் ஓய்ந்தது. நாளை தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# அடுத்த 4 நாட்களுக்கு வெப்ப அலை வீசும்

### இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை

புதுடெல்லி, ஏப். 18-

இந்தியாவில் சில பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு வெப்ப அலை நிலவும் என இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கோடை காலம் தொடங்கியுள்ள நிலையில், வெயிலின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பல நகரங்களில் 100 டிகிரி பாரன்ஹீட்டை தாண்டி விட்டது வெயில். தமிழ்நாடு மட்டுமின்றி இந்தியாவின் பல பகுதிகளிலும் வெயில் கொளுத்தி வருகிறது. இந்த நிலையில், இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD) ஏப்ரல் 20-ம் தேதி வரை பல மாநிலங்களுக்கு வெப்ப அலை எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இது தொடர்பாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருப்பதாவது., "ஒடிசா, மேற்கு வங்காளம், ஆந்திரா, தெலுங்கானா ஆகிய பகுதிகளில் அடுத்த 4 நாட்களுக்கு வெப்ப அலை நிலவும். பொது மக்கள் லேசான, வெளிர் நிற, பருத்தி ஆடைகளை அணியவும். தலையை மறைக்க துணி, தொப்பி அல்லது குடையைப் பயன்படுத்தவும். சமவெளி பகுதிகளில் குறைந்தபட்ச வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸ் அல்லது அதற்கும் அதிகமாகவும், மலைப் பகுதிகளில் குறைந்தபட்ச வெப்பநிலை 30 டிகிரி செல்சியஸ் அல்லது அதற்கும் அதிகமாகவும் இருக்கும்.

பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், டெல்லி, உத்தரபிரதேசம் மற்றும் ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் ஏப்ரல் 18-20 வரை இடியுடன் கூடிய மழை பெய்யும். பலத்த காற்று வீசும். டெல்லியில் ஏப்ரல் 17 ஆம் தேதி வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டு குளிர்ந்த காற்று வீசும். ஏப்.18 இல் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். ஏப்ரல் 19 அன்று இடியுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யும். பலத்த காற்று வீசும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்படுள்ளது.

# ‘நான் முதல்வன்’ இளைஞர்களின் கனவுகளை நனவாக்கும் திட்டம்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, ஏப். 18-

‘நான் முதல்வன்’ நம் இளைஞர்களின் கனவுகளை நனவாக்கும் திட்டம் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

மத்திய அரசு பணிகளான ஐஏஎஸ், ஐஎஃப்எஸ், ஐபிஎஸ் உள்ளிட்ட பணிகள் மற்றும் குரூப் ‘ஏ’ மற்றும் குரூப் ‘பி’ பணிகளுக்கான யுபிஎஸ்சி தேர்வுகள் கடந்த ஆண்டு நடைபெற்றன. இதில் முதல்நிலை தேர்வு, மெயின் தேர்வு, நேர்காணல் ஆகிய மூன்று கட்டங்களிலும் தேர்வு நடைபெறும். இதில் தேர்ச்சி பெற்று, தேர்வு செய்யப்படுவோருக்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்களின் அடிப்படையில், பணிகள் ஒதுக்கப்படும்.

இந்நிலையில், 2023 யுபிஎஸ்சி முதல்நிலை தேர்வுகள் கடந்த ஆண்டு மே 28-ம் தேதி அன்று நடத்தப்பட்டு, அதில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு மெயின் தேர்வு கடந்த ஆண்டு செப்டம்பர் 15, 2023 அன்று முதல் ஐந்து நாட்களுக்கு நடத்தப்பட்டது. மெயின் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு 2024 ஜனவரி 4 முதல் ஏப்ரல் 9-ம் தேதி வரை நேர்காணல் நடத்தப்பட்டது. நேற்று (ஏப். 16) யுபிஎஸ்சி தேர்வு ஆணையம் இந்த தேர்வு முடிவுகளை தனது இணையதளப் பக்கத்தில் வெளியிட்டது. இதில், 1143 தேர்வர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். இந்த தேர்வில் லக்னோவை சேர்ந்த ஆதித்ய ஸ்ரீவஸ்தவா என்பவர் முதலிடம் பிடித்து உள்ளார்.

சென்னையை சேர்ந்த மருத்துவ மாணவர் பிரஷாந்த் என்பவர் யுபிஎஸ்சி தேர்வில் தமிழ்நாடு அளவில் 2ஆம் இடம் பிடித்துள்ளார். இந்தியா அளவில் 78வது இடத்தை பிடித்திருப்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து குடிமை பணிகள் தேர்வு எழுதக் கூடியவர்களுக்கு தேவையான உதவிகளை செய்ய இருப்பதாக இவர் தெரிவித்துள்ளார். பிரசாந்த் சென்னை மருத்துவக் கல்லூரியில் கடந்த 2022 ஜூன் மாதம் MBBS படிப்பை முடித்தார். 2022 ஆகஸ்ட் முதல் சிவில் சர்வீசஸ் தேர்வுக்காக தயாராகி வந்த நிலையில், 2022 ஆகஸ்ட் மாதத்துக்கு பிறகு நான் முதல்வன் திட்டத்தில் சேர்ந்து பயிற்சி பெற்றார்.

இது தொடர்பாக தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது: ‘நான் முதல்வன்’ திட்டம், என் கனவுத்திட்டம் மட்டுமல்ல; நம் இளைஞர்களின் கனவுகளை நனவாக்கும் திட்டம்! நேற்று வெளியான UPSC முடிவுகளே அதற்கு சாட்சி! இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# மத்தியில் இழுபறி நிலை வந்தால் யாருக்கு ஆதரவு?

### எடப்பாடி பழனிசாமி பேட்டி

சேலம், ஏப். 18-

மத்தியில் இழுபறி நிலை வந்தால் யாருக்கு ஆதரவு? என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி விளக்கமளித்துள்ளார்.

நாட்டில் பாராளுமன்றத் தேர்தல் மொத்தம் 7 கட்டங்களாக நாளை முதல் ஜூன் 1 வரை நடக்க உள்ளது. பின்னர், வாக்கு எண்ணிக்கை ஜூன் 4-ம் தேதி நடக்க உள்ளது. தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் முதற் கட்டமாக நாளை 40 தொகுதிகளிலும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளதால், இறுதிகட்ட பிரச்சாரத்தில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, சேலத்தில் அதிமுக வேட்பாளர் ப.விக்னேஷை ஆதரித்து பிரசாரத்தில் ஈடுபட்டார். இதனைத் தொடர்ந்து, செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூறியதாவது:

" 2014 ஆம் ஆண்டுக்கு முன்பு கச்சா எண்ணெய் விலைக்கு ஏற்ப பெட்ரோல், டீசல் விலை குறைக்கப்பட்டது. ஆனால் மத்தியில் பாஜக ஆட்சிக்கு வந்த பின்னர் பெட்ரோல், டீசல் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது. 2019 மக்களவைத் தேர்தலின்போது கொடுத்த வாக்குறுதிகளை பாஜக அரசு நிறைவேற்றவில்லை. பெட்ரோல், டீசல் விலை உயர்வால் அத்யாவசியப் பொருள்களின் விலை அதிகமாக உயர்ந்துள்ளது.

மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் நிதியை மத்திய அரசு முழுமையாக வழங்குவதில்லை. இயற்கைச் சீற்றங்களின் போது கேட்கப்படும் நிதியை மத்திய அரசு முறையாக வழங்குவதில்லை. மத்திய அமைச்சர்கள் தேர்தல் பிரசாரத்திற்கு மட்டுமே தமிழ்நாடு வருகின்றனர். மாநில பிரச்னைகள் குறித்து யாரும் பேசுவதில்லை. திமுக ஆட்சியில் நிர்வாகத் திறமையின்மை காரணமாக மக்கள் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

அனைத்து துறைகளிலும் ஊழல் தலைவிரித்து ஆடுகிறது. அதிமுக மற்றும் கூட்டணிக் கட்சிகளுக்கு வாக்களித்து புதிய வரலாற்றுச் சாதனையை படைக்க வேண்டும். மக்களவைத் தேர்தல் கருத்துக்கணிப்புகளை பொருட்படுத்த வேண்டியதில்லை." என்றார்.

மேலும் "இழுபறி என வந்தால் யாருக்கு ஆதரவு?" என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு, "தேர்தல் முடிவுகளில் இழுபறி நிலை வந்தால் யாருக்கு ஆதரவு என்பதை அந்த நேரத்தில் தெரிவிப்போம். சுப்ரீம் கோர்ட் உத்தரவையே மதிக்காத தேசியக் கட்சிகளுடன் கூட்டணி வைத்து என்ன பயன்" என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - இ.பி.எஸ். உள்ளிட்ட

# அரசியல் தலைவர்களின் அனல் பறக்கும் இறுதிகட்ட பிரசாரம்

சென்னை, ஏப். 18-

தமிழ்நாட்டில் நாளை (ஏப். 19) தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், நேற்றுடன் பிரசாரம் நிறைவடைந்தது. இந்நிலையில், நேற்று மாலை 6 மணி வரை முதல்வர் ஸ்டாலின் - இ.பி.எஸ். உள்ளிட்ட அரசியல் கட்சி தலைவர்கள் இறுதி கட்ட பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

நாடு முழுவதும் நாளை தொடங்கி ஜூன் 1-ம் தேதி வரை பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. 7 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ள நிலையில் முதல் கட்டமாக தமிழ்நாட்டில் 39 தொகுதிகளுக்கும், புதுச்சேரியில் ஒரு தொகுதி என மொத்தம் 40 தொகுதிகளுக்கு நாளை (ஏப். 19) ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. நாளை தமிழ்நாட்டு மற்றும் புதுச்சேரியில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில், கடந்த 4 வாரங்களுக்கு மேலாக அனல்பறக்க நடந்துவந்த பிரசாரம் நேற்று மாலை 6 மணியுடன் முடிவடைந்தது.

தமிழ்நாட்டில் திமுக, அதிமுக, பாஜக கட்சிகள் கூட்டணி வைத்து போட்டியிடுகின்றன. நாம் தமிழர் கட்சி வழக்கம் போல் இந்த முறையும் தனித்து களம் காண்கிறது. இவர்களை தவிர, ஏராளமான சுயேச்சைகளும் போட்டியிட போகிறார்கள். இந்நிலையில், தமிழ்நாடு அரசியல் தலைவர்கள் மட்டுமல்லாமல், தேசிய தலைவர்களும் தமிழ்நாட்டில், ஓட்டு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள். இதுவரை இல்லாத அளவுக்கு, பிரதமர் மோடி, கடந்த 4 மாதங்களில் 8 முறை தமிழ்நாட்டிற்கு வந்துள்ளார். காங்கிரஸ் முன்னாள் தலைவரும் எம்.பி.யுமான ராகுல் காந்தி, அகில இந்திய காங்கிரஸ் தலைவர் கார்கே என காங்கிரஸ் கட்சியை சேர்ந்த தலைவர்களும் இன்டியா கூட்டணிக்காக சேகரித்தார்கள்.

பிரசாரம் செய்வதற்கு நேற்று கடைசி நாள் என்பதால், நேற்று காலை முதலே முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, பாஜக தலைவர் அண்ணாமலை, நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன், தேமுதிக தலைவர் பிரேமலதா விஜயகாந்த், முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் என அனைவரும் இறுதிகட்ட பிரசாரம் மேற்கொண்டனர்.

**தி.மு.க. - முதல்வர் மு.க.ஸ்டாலின்:**

முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வீடியோ பரப்புரை ஒன்றை வெளியிட்டார். அந்த வீடியோவில், "வரும் ஏப்ரல் 19ம் தேதி நம் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்க போகும் நாள். உங்க வாக்கு உங்க தொகுதியை மட்டும் தேர்வு செய்வதற்கான வாக்கு மட்டுமல்ல. 10 ஆண்டுகளாக நம் நாட்டை நாசப்படுத்திய ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கிற தேர்தல். இனி இந்தியாவில் ஜனநாயகம் இருக்க வேண்டுமா ? வேண்டாமா ? என்று முடிவு செய்கிற தேர்தல் இது" இவ்வாறு கூறி 39 தொகுதிகளில் திமுக சார்பிலும், கூட்டணிக் கட்சிகள் சார்பிலும் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களை கூறி வாக்கு சேகரித்தார்.

**அ.தி.மு.க. - எடப்பாடி பழனிசாமி:**

அதிமுக சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், "பாராளுமன்ற


(கடைசி பக்கம் பார்க்க)

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -456.10 | -124.60 |
| பாயிண்ட் 72943.68 | பாயிண்ட் 22147.9 |



| தங்கம் | வெள்ளி |
|---|---|
| 1 சவரன் ₹54,960 | 1 கிலோ ₹90,500 |
| 1 கிராம் ₹6,870 | 1 கிராம் ₹90.50 |



டாலர் ₹83.66

பெட்ரோல் ₹101.57

டீசல் ₹93.18

# மியான்மர்: சிறையில் இருந்து வீட்டு காவலுக்கு ஆங் சான் சூகி மாற்றம்

**மியான்மர், ஏப் 18-**

மியான்மரில் ராணுவ ஆட்சியை எதிர்த்து பல போராட்டங்களை நடத்திய ஆங் சான் சூகி சிறையில் இருந்து வீட்டுக் காவலுக்கு மாற்றப்பட்டுள்ளதாக மியான்மர் ராணுவம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடான மியான்மரில் ராணுவ ஆட்சியை எதிர்த்து பல போராட்டங்களை நடத்தியவர் ஆங் சான் சூகி (78). அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற இவர் கடந்த 2020-ம் ஆண்டு தேசிய ஜனநாயக கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிட்டு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆனால் தேர்தலில் மோசடி செய்ததாக கூறி அடுத்த ஆண்டே இவரது பதவி பறிபோனது. இதனால் அங்கு மீண்டும் ராணுவ ஆட்சி கொண்டு வரப்பட்டது. மேலும் இரண்டரை ஆண்டுகளுக்கு அங்கு அவசர நிலை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதற்கிடையே ஆங் சான் சூகி உள்பட 100-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். இதனையடுத்து ஆங் சான் சூகி மீது ராணுவத்துக்கு எதிரான கிளர்ச்சி, ஊழல் முறைகேடு உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இது தொடர்பாக பல வழக்குகள் அந்த நாட்டின் கோர்ட்டில் நிலுவையில் உள்ளது. இவற்றுள் சில வழக்குகளில் அவருக்கு இதுவரை 27 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில், ஆங் சான் சூகி சிறையில் இருந்து வீட்டுக் காவலுக்கு மாற்றப்பட்டுள்ளதாக மியான்மர் ராணுவம் தெரிவித்துள்ளது. வெப்ப அலை காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறையிலிருந்து மாற்றப்பட்ட ஆங் சான் சூகி எங்கு இருக்கிறார் என்பது குறித்த தகவல் வெளியாகவில்லை.

### ஐக்கிய அரபில் பெய்த கனமழை:
# வெள்ள நீரில் மிதந்த துபாய் சர்வதேச விமான நிலையம்

**துபாய்,ஏப் 18-**

ஐக்கிய அரபு அமீரகம் முழுவதும் பெய்த கனமழையை தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளநீரில் துபாய் சர்வதேச விமான நிலையம் மிதந்தது. இது தொடர்பான வீடியோ வைரலாகி வருகிறது.

துபாயில் பாலைவனம் நிறைந்த பகுதிகள் அதிகளவில் உள்ளன. வெப்பநிலையும் அதிகரித்து காணப்படும் சூழலில், ஐக்கிய அரபு அமீரகம் முழுவதும் நேற்று முன்தினம் பெய்த கனமழையால் பல்வேறு இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதனால், சாலைகளில் நீர் தேங்கியது. பல இடங்களில் வாகன போக்குவரத்தும் முடங்கியது.கனமழை மற்றும் வெள்ளம் எதிரொலியாக, விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டது. துபாயில் சர்வதேச பயணிகள் அதிகம் வரக்கூடிய, உலகில் பரபரப்புடன் இயங்க கூடிய துபாய் சர்வதேச விமான நிலையத்தில் வெள்ளநீர் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

இதனை தொடர்ந்து, விமான நிலையத்திற்கு வந்த பல விமானங்கள் வேறு பகுதிகளுக்கு திருப்பி விடப்பட்டன. மாலையில் 100 விமானங்கள் வரை வந்து சேரக்கூடிய நிலையில், நேற்று முன்தினம் பல விமானங்களின் வருகை பாதிக்கப்பட்டது. எண்ணற்ற விமானங்கள் காலதாமதத்துடனும், ரத்து செய்யப்பட்டும் இருந்தன. இது விமான பயணிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியது.

விமான ஓடுபாதையில் வெள்ளம் புகுந்ததில், விமானங்கள் மற்றும் கார்கள், நீரில் பாதியளவு மூழ்கின. விமானங்கள் நிறுத்தும் பகுதியில் வெள்ளநீர் புகுந்தது. விமான நிலையத்திற்கு வந்து சேரும் சாலைகளும் நீரில் மூழ்கி இருந்தன.

இதே போன்று, துபாயில் உள்ள துபாய் மால், அமீரக மால் உள்ளிட்ட வணிக வளாகங்கள் மற்றும் பிற முக்கிய கட்டிடங்களில் வெள்ளம் சூழ்ந்து காணப்பட்டது. துபாயின் மெட்ரோ ரயில் நிலையம் ஒன்றில் வெள்ள நீர் புகுந்திருந்தது. சாலைகள், குடியிருப்பு பகுதிகள் நீரில் மூழ்கின.

பல்வேறு வீடுகளின் மேற்கூரைகள், கதவுகள் மற்றும் ஜன்னல்கள் வழியே நீர் உள்ளே புகுந்தது.ஐக்கிய அரபு அமீரகம் முழுவதும் வெள்ள பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. இதனால், அமீரகத்தில் உள்ள பள்ளிகள் முழுவதும் மூடப்பட்டன.

துபாய் மட்டுமின்றி பக்ரைன் மற்றும் ஓமனிலும் புயலால் வெள்ளம் ஏற்பட்டது. ஓமன் நாட்டில் கனமழை மற்றும் பெருவெள்ளத்திற்கு 18 பேர் பலியாகி உள்ளனர்.

தொடர்ந்து சில நாட்களுக்கு ஓமனின் வடகிழக்கு மற்றும் வடக்கு பகுதியில் மிதமானது முதல் கனமழை பெய்யக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### நிதானத்தை கடைபிடியுங்கள்:
# இஸ்ரேல் பிரதமரிடம் ரிஷி சுனக் வலியுறுத்தல்

**லண்டன், ஏப் 18-**

ஈரான் தாக்குதல் விவகாரத்தில் நிதானத்தை கடைபிடிக்குமாறு இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவிடம், இங்கிலாந்து பிரதமர் ரிஷிசுனக் தொலைபேசியில் வலியுறுத்தி உள்ளார்.

சிரியாவில் உள்ள ஈரான் தூதரகம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் எங்கள் நாட்டின் இரண்டு தளபதிகள் உயிரிழந்ததால் அதற்கு பதிலடி கொடுப்போம் என ஈரான் சூளுரைத்தது. சூளுரைத்த போல கடந்த ஞாயிற்றுக்கிழமை டிரோன்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது.

லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பினர் ஈரானுக்கு ஆதரவாக தாக்குதல் நடத்தியது. அதே போல் ஈரான் நேரடியாகவும் தாக்குதல் நடத்தியது. ஈரான் தாக்குதலை எதிர்பார்த்த இஸ்ரேல் அமெரிக்கா உதவியுடன் அனைத்து ஏவுகணைகளையும் வான் எல்லையிலேயே எதிர்த்து வெற்றிகரமாக அழித்து தாக்கியது.

இதனால் இஸ்ரேல் நாட்டில் பெரும் சேதம் ஏற்படுவது தடுத்து நிறுத்தப்பட்டது. தாக்குதலுக்கு தயார் என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்திருந்தார். அதே வேளையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், ஈரான் தாக்குதலுக்கு பதிலடியாக ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படாது எனத் தெரிவித்தார். இஸ்ரேல்- ஈரான் மோதல் காரணமாக உலகப் போர் மூளும் என அஞ்சப்படுகிறது. இந்த நிலையில் இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவிடம் டெலிபோன் மூலம் பேசினார். அப்போது ஈரான் தாக்குதலை தொடர்ந்து நிதானத்தை கடைபிடிக்குமாறு வலியுறுத்தியுள்ளார். ஈரான் தவறான கணக்கு போட்டுள்ளது. உலகளாவிய அளவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. பதற்றம் அதிகரிப்பு யாருக்கும் நலன் இல்லை மற்றும் மத்திய கிழக்கில் பாதுகாப்பின்மை மேலும் தீவிரமாகும். நிதானத்தை கடைபிடிக்க வேண்டிய தருணம் இது எனத் தெரிவித்துள்ளார்.

ஈரான் தாக்குதல் நடத்திய நிலையில் இங்கிலாந்தின் விரைவான மற்றும் வலுவான ஆதரவு நன்றி என நெதன்யாகு ரிஷி சுனக்கிடம் தெரிவித்துள்ளார்.

# இந்திய பொருளாதாரம் வலுவாக உள்ளது: சர்வதேச நிதியம் பாராட்டு

**வாஷிங்டன், ஏப் 18-**

இந்திய பொருளாதாரம் வலுவாக உள்ளதாக சர்வதேச நாணய நிதியம் பாராட்டு தெரிவித்துள்ளது.

இது குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை பொருளாதார நிபுணர் பியர் ஒலிவியர் கூறியதாவது:-

இந்தியா வலுவான செயல்திறன் கொண்ட நாடாக உள்ளது. இதன் மூலம், உலகிலேயே வேகமாக வளரும் பொருளாதாரமாக இந்தியா தொடர்கிறது. 2023 முதல் 2024 வரையிலான நிதியாண்டில் நாங்கள் திருத்தம் செய்துள்ளோம். 2024-ம் நிதியாண்டில் இருந்து 2025-ம் ஆண்டிற்கு 0.3 சதவீத புள்ளிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இதில் இந்தியா நன்றாக செயல்பட்டு வருகிறது என்றார்.

மேலும் உலகப் பொருளாதார கண்ணோட்டத்தின் மதிப்பில், இந்தியாவின் வளர்ச்சி 2024-ம் ஆண்டில் 6.8 சதவீதமாகவும், 2025-ம் ஆண்டு 6.5 சதவீதமாகவும் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது வலிமையானது.

உள்நாட்டுத் தேவை மற்றும் உழைக்கும் வயது மக்கள் தொகையில் தொடர்ந்து வலுப்பெறுவதை பிரதிபலிக்கிறது. அதே நேரத்தில், வளர்ந்து வரும் மற்றும் வளரும் ஆசியாவின் வளர்ச்சி 2023-ம் ஆண்டு மதிப்பிடப்பட்ட 5.6 சதவீதத்தில் இருந்து 2024-ம் ஆண்டில் 5.2 சதவீதமாகவும், 2025-ம் ஆண்டில் 4.9 சதவீதமாகவும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2023-ம் ஆண்டில் 3.2 சதவீதமாக மதிப்பிடப்பட்ட உலகளாவிய வளர்ச்சி, 2024 மற்றும் 2025-ல் அதே வேகத்தில் தொடரும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### பிரசாரத்தின் போது திடீர் உடல்நலக்குறைவு:
# நடிகர் மன்சூர் அலிகான் மருத்துவமனையில் அனுமதி

**வேலூர், ஏப் 18-**

பிரச்சாரத்தின் போது திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் நடிகர் மன்சூர் அலிகான் மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமிழகத்தில் பாராளுமன்ற தேர்தல் நாளை நடைபெறுகிறது. இதையடுத்து தேர்தல் பிரச்சாரம் நேற்று மாலையுடன் நிறைவு பெற்றது. இதனால் அரசியல் கட்சி தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், வேலூர் பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் நடிகர் மன்சூர் அலிகான் நேற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தொகுதி முழுவதும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்த மன்சூர் அலிகான் நேற்று குடியாத்தம் பகுதியில் இறுதி கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது மன்சூர் அலிகானுக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இதனையடுத்து குடியாத்தத்தில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் அவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

# உங்கள் ராம ராஜ்ஜியம் என்ற பெயரில் புதிய இணையதளம்
### ஆம் ஆத்மி கட்சி தொடங்கியது

**புதுடெல்லி, ஏப் 18-**

டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் செய்த பணிகளை முன்னிலைப்படுத்தும் விதமாக உங்கள் ராம ராஜ்ஜியம் என்ற பெயரில் புதிய இணையதளத்தை ஆம் ஆத்மி கட்சி நேற்று துவக்கி உள்ளது.

பாராளுமன்ற தேர்தல் நாடு முழுவதும் நாளை 19-ம் தேதி தொடங்கி ஜூன் 1-ம் தேதி வரை 7 கட்டங்களாக நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் ஜூன் 4-ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அரசியல் கட்சி தலைவர்கள் அனல் பறக்கும் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், ஆம் ஆத்மி கட்சியும் தனது பிரச்சாரத்தை தொடங்கியுள்ளது. அந்த வகையில் நேற்று ராம நவமியை முன்னிட்டு டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் செய்த பணிகளை முன்னிலைப்படுத்தும் விதமாக உங்கள் ராம ராஜ்ஜியம் (https://aapkaramrajya.com/) என்ற புதிய இணையதளத்தை தொடங்கியுள்ளது.

இந்த இணையதளத்தில் ஆம் ஆத்மி கட்சி மக்களுக்கு செய்த நலத் திட்டங்கள் குறித்த விவரங்கள் இடம்பெற்றுள்ளது. இந்த இணையதளத்தை ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவர்கள் சஞ்சய் சிங், அதிஷி, சவுரப் பரத்வாஜ், ஜாஸ்மின் ஷா ஆகியோர் தொடங்கி வைத்து செய்தியாளர்களிடம் பேசினர். கடந்த 10 ஆண்டுகளில் நாங்கள் டெல்லியில் மூன்று முறை ஆம் ஆத்மி அரசை அமைத்துள்ளோம் என்பது மட்டுமல்ல, பஞ்சாபிலும் மிகப் பெரிய பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்துள்ளோம்.

கெஜ்ரிவால் தலைமையில் டெல்லியிலும், பகவந்த் மான் தலைமையில் பஞ்சாபிலும் ஆம் ஆத்மி கட்சி பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றி உள்ளது. நாங்கள் செய்துள்ள பணிகளை மக்களுக்கு தெரிவிக்கவும், ராம ராஜ்ஜியத்தை அமைக்க வேண்டும் என்ற எங்கள் கனவின் உறுதியை வெளிப்படுத்தவும் இந்த இணையதளத்தைத் தொடங்கி உள்ளோம்.

ராம ராஜ்ஜியம் குறித்த எங்கள் கனவை அறிந்து கொள்ள விரும்புபவர்கள் இந்த இணையதளத்தை அவசியம் காண வேண்டும். டெல்லியிலும், பஞ்சாபிலும் நாங்கள் என்ன செய்திருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ள முடியும். அதன் பிறகு நீங்கள் எங்களோடு இணையலாம் என சஞ்சய் சிங் தெரிவித்தார்.

அவரை தொடர்ந்து டெல்லி அமைச்சர்அதிஷி பேசுகையில்,ராம சரிதம் தந்த உந்துதல் காரணமாகவே டெல்லி மற்றும் பஞ்சாப் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தனது அரசு கடந்த 9 ஆண்டுகளாக பாடுபட்டு கொண்டிருக்கிறது என கெஜ்ரிவால் கூறி இருக்கிறார். ராம ராஜ்ஜியம் குறித்த நிறைவை மக்கள் பெறுவதற்காக ராமர் கடுமையான சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. 14 ஆண்டுகள் வனத்துக்கு சென்றார். அவர் தனது வாக்குறுதியை மீறவில்லை. கெஜ்ரிவாலும் அதே கடுமையான போராட்டங்களை எதிர்கொண்டு வருகிறார் என்று தெரிவித்தார்.

### காங்கிரஸ் கட்சிக்கு எதிராக கருத்து:
# சந்திரசேகர ராவ் விளக்கமளிக்க தேர்தல் ஆணையம் நோட்டீஸ்

**புதுடெல்லி,ஏப் 18-**

காங்கிரஸ் கட்சிக்கு எதிராக சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவித்ததாக வந்த புகாரையடுத்து சந்திரசேகரராவ் இன்று தனது நிலைப்பாட்டை விளக்குமாறு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

பாராளுமன்ற தேர்தல் நாடு முழுவதும் நாளை 19-ம் தேதி தொடங்கி ஜூன் 1-ம் தேதி வரை 7 கட்டங்களாக நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் ஜூன் 4-ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அரசியல் கட்சி தலைவர்கள் அனல் பறக்கும் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 5-ம் தேதி தெலுங்கானா மாநிலம் சிர்சில்லாவில் பி.எஸ்.ஆர். தலைவர் சந்திரசேகர ராவ் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களை சர்ச்சைக்குரிய வகையில் பேசியதாக தெரிகிறது. சந்திரசேகர ராவின் இந்த கருத்துகள் சர்ச்சையை ஏற்படுத்தியது.

சந்திரசேகர ராவ் பேச்சுக்கள் தொடர்பாக முன்னதாகவே பல்வேறு அறிவுறுத்தல்களை தேர்தல் ஆணையம் வழங்கியிருந்த நிலையில், மீண்டும் அவர் சர்ச்சையை கிளப்பியது, ஆணையத்தின் நடவடிக்கைக்கு வித்திட்டது. இந்த சம்பவம் தொடர்பாக தெலுங்கானா மாநிலம் காங்கிரஸ் கமிட்டியின் மூத்த துணை தலைவர் ஜி. நிரஞ்சனிடம் இருந்து கடந்த 6-ம் தேதி அன்று தேர்தல் ஆணையம் விரிவான புகார் ஒன்றை பெற்றது. அதில் கே. சந்திரசேகர் ராவ் சிர்சில்லாவில் நடந்த செய்தியாளர் சந்திப்பில், காங்கிரஸ் கட்சிக்கு எதிராக ஆட்சேபனைக்குரிய வகையில் பேசியதாக புகார் அளிக்கப்பட்டது.

காங்கிரஸ் கட்சியினர் புகார் தொடர்பாக இன்று 18-ம் தேதி காலை 11 மணிக்குள் தனது நிலைப்பாட்டை விளக்குமாறு சந்திரசேகர ராவுக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் பிறப்பித்துள்ளது. குறிப்பிட்ட காலத்திற்குள் அவரிடமிருந்து பதில் வரவில்லை என்றால், ஆணையத்தின் உரிய நடவடிக்கைக்கு சந்திரசேகர ராவ் ஆளாக நேரிடும் என்றும் தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது.



சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் பிறந்த நாளை முன்னிட்டு மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவ படத்திற்கு அ.தி.மு.க. பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி சேலம் நெடுஞ்சாலை நகரில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

# ராம நவமி: அயோத்தி கோவில் பால ராமர் சிலையின் நெற்றியில் விழுந்த சூரிய ஒளி
### டேப்லெட்டில் பிரதமர் மோடி தரிசனம்

**அயோத்தி, ஏப் 18-**

ராமநவமியையொட்டி அயோத்தி கோவிலில் பால ராமர் சிலையின் நெற்றியில் சூரிய ஒளி விழும் அபூர்வ நிகழ்வு நடந்தது. இதனை ஏராளமான பக்தர்கள் கண்டு தரிசித்தனர். பிரதமர் மோடி தனது டேப்லெட் மூலம் கண்டு தரிசித்தார்.

பகவான் ஸ்ரீ ராமரின் அவதாரத் திருநாளான நேற்று ராம நவமி விழா உற்சாகமாக கொண்டாடப்பட்டது. கோவில்களில் சிறப்பு அபிஷேக, ஆராதனைகள் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

அயோத்தியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ராமர் கோவிலில் பால ராமருக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. ராம நவமி கொண்டாட்டத்தின் சிகர நிகழ்வான சூரிய அபிஷேக மகோத்சவம் நேற்று நடைபெற்றது.

நண்பகல் 12.01 மணிக்கு கோவில் கருவறையில் கம்பீரமாக வீற்றிருக்கும் பால ராமர் சிலையின் நெற்றியில் சூரிய ஒளிக்கதிர் விழும் அபூர்வ நிகழ்வு நடைபெற்றது. பால ராமரின் நெற்றியில் சுமார் இரண்டரை நிமிடங்களுக்கு சூரிய ஒளிக்கதிர் விழுந்து திலகமிட்டது.

நெற்றித் திலகத்தின் அளவு 58 மி.மீ. அளவுக்கு இருந்தது. இந்நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர். இந்த நிகழ்வை அயோத்தியில் உள்ள பக்தர்கள் தெளிவாக காணும் வகையில் நகரம் முழுவதும் 100-க்கும் மேற்பட்ட எல்.இ.டி. திரைகளில் ஒளிபரப்பப்பட்டது.

அயோத்தி ராமர் கோவிலின் கருவறைக்குள் சூரிய ஒளி நேரடியாக நுழைய வழி இல்லை. இதனால், கண்ணாடிகள் மற்றும் லென்ஸ்கள் அடங்கிய ஒரு விரிவான வடிவமைப்பு மூலம் பால ராமருக்கு சூரிய திலகம் நிகழ்வை நிகழ்த்தி உள்ளனர்.

மூன்றாவது தளத்தில் இருந்து சூரிய ஒளிக்கதிர், கருவறையில் இருக்கும் பால ராமரின் நெற்றியில் சரியாக விழும் வகையில் செய்யப்பட்டுள்ளது.

இந்தியன் வானியற்பியல் நிறுவனத்துடன் கலந்தாலோசித்து, ரூர்க்கியில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்த அமைப்பை உருவாக்கி உள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டும் ராம நவமி அன்று பால ராமரின் சிலையின் நெற்றியில் சூரியனின் கதிர்களை துல்லியமாக விழச் செய்யும் வகையில் ஆப்டோ மெக்கானிக்கல் அமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. சூரியனின் திசையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப கண்ணாடிகள் மற்றும் லென்ஸ்களில் சிறிய மாற்றங்கள் செய்ய வேண்டியிருக்கும்.

அயோத்தி ராமர் கோவில் திறக்கப்பட்ட பிறகு நடைபெறும் முதல் ராம நவமி விழா மற்றும் முதல் சூரிய திலகம் நிகழ்வு இது என்பது குறிப்பிடத்தக்கது. ராம நவமியை முன்னிட்டு, பால ராமர் மஞ்சள் நிற ஆடை அலங்காரத்தில் காட்சியளித்தார். ராமருக்கு 56 வகையான பிரசாதங்கள் படைக்கப்பட்டன.

இந்நிலையில், அசாமில் நல்பாரி பேரணியில் கலந்து கொண்ட பிரதமர் மோடி தனது டேப்லெட் மூலம் ராமர் சிலையின் நெற்றியில் சூரிய ஒளிக்கதிர் விழும் அபூர்வ நிகழ்வை கண்டுகளித்தார். இதுகுறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

எனது நல்பாரி பேரணிக்குப் பிறகு, ராம் லல்லாவில் சூர்ய திலகத்தை பார்த்தேன். கோடிக்கணக்கான இந்தியர்களை போலவே எனக்கும் இது மிகவும் உணர்ச்சிகரமான தருணம்.

அயோத்தியில் பிரமாண்டமான ராம நவமி வரலாற்று சிறப்புமிக்கது இந்த சூர்ய திலகம் நம் வாழ்வில் ஆற்றலைக் கொண்டு வரட்டும். மேலும், இது நமது தேசத்தை பெருமையின் புதிய உயரங்களை அடைய ஊக்குவிக்கட்டும் என்று பதிவிட்டுள்ளார்.

# தமிழகத்தில் ஒரே நாளில் ரூ.400 கோடிக்கு மது விற்பனை

**சென்னை, ஏப் 18-**

தமிழகத்தில் நேற்று முன்தினம் ஒரே நாளில் ரூ. 400 கோடிக்கு மது விற்பனையாகி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பாராளுமன்ற தேர்தலையொட்டி நேற்று முதல் 3 நாட்களுக்கு (19-ம் தேதி வரை) டாஸ்மாக் மதுக்கடைகள் மூடப்படுகிறது. நேற்று கடைசி நாள் பிரச்சாரம் நடைபெற்றதையொட்டியும், நாளை தேர்தல் அன்று மதுபோதையால் ஏற்படும் பிரச்சனைகளை தடுக்கும் வகையிலும் தமிழக அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டு உள்ளது.

இதையடுத்து நேற்று முன்தினம் தமிழகம் முழுவதும் டாஸ்மாக் கடைகளில் கூட்டம் அலைமோதியது. அனைத்து மதுபான கடைகளிலும் குடிமகன்கள் மது குடிப்பதற்காக குவிந்தனர். நேற்று முதல் 3 நாட்களும் மதுகுடிக்க முடியாது என்பதால் பலர் கூடுதல் மதுபாட்டில்களை வாங்கி இருப்பு வைத்தனர். நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் வழக்கமான விற்பனையை விட இரண்டரை மடங்கு கூடுதலாக மது விற்பனை நடைபெற்றிருப்பதாக டாஸ்மாக் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். டாஸ்மாக் கடைகளில் தினசரி மது விற்பனை ரூ.150 கோடி அளவுக்கு இருக்கும் என்றும் இரண்டரை மடங்கு அளவுக்கு நேற்று முன்தினம் கூடுதலாக மது விற்பனை நடைபெற்றிருப்பதால் ரூ.400 கோடி அளவுக்கு மது விற்பனையாகி இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களிலும் மது விற்பனை அதிக அளவில் இருந்துள்ளது. இது தொடர்பாக டாஸ்மாக் பார் உரிமையாளர் ஒருவர் கூறும் போது,

சென்னையில் சில கடைகளில் 4 மடங்கு வரை கூடுதலாக மது விற்பனையாகி இருப்பதாக தெரிவித்தார். நேற்று முதல் 3 நாட்கள் மூடப்பட்டுள்ள மதுக்கடைகள் மீண்டும் வருகிற 20-ம் தேதி திறக்கப்படும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மகாவீர் ஜெயந்தி அன்று மதுக்கடைகள் மீண்டும் மூடப்படும்.

இதனால் தேர்தலுக்கு மறுநாளான சனிக்கிழமை அன்றும் டாஸ்மாக் கடைகளில் கூட்டம் அலைமோத வாய்ப்பு உள்ளது. அன்றும் மது விற்பனை அதிக அளவில் நடைபெறும் என்று டாஸ்மாக் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இப்படி தொடர்ச்சியாக டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டிருக்கும் நாட்களில் கூடுதல் விலைக்கு மது விற்பவர்களை பிடிக்க போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

# இண்டியா கூட்டணிக்கு வாக்களிக்க ஜெய்பீம் பட இயக்குநர் வேண்டுகோள்

**சென்னை,ஏப் 18-**

பாராளுமன்ற தேர்தலில் இண்டியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு மக்களுக்கு ஜெய்பீம், வேட்டையன் பட இயக்குநர் த.செ.ஞானவேல் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

வாக்குரிமை என்பது என் உரிமைகளைக் காத்து, உணர்வுகளைப் புரிந்து ஆட்சி செய்கிற ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் சமூகக் கடமை.வருங்கால தலைமுறையினருக்கு வெறுப்பு நிலவாத, சக இந்தியர்களின் தனித்துவத்தை மதிக்கிற பாதுகாப்பான சூழலை அமைத்து தருவது நமது தார்மீக கடமை. இண்டியா கூட்டணி கட்சிகளின் வாக்குறுதிகள் சமூக நல்லிணக்கத்தையும், சமூக நீதியையும் காப்பாற்றும் என்கிற நம்பிக்கை அளிக்கின்றன. மாநில உரிமை, மொழி உரிமை, கருத்து உரிமை, கல்வி உரிமை போன்ற அடிப்படை உரிமைகளை மீட்டெடுப்பதும், காத்துக் கொள்வதும் அவசியம்.

அதன் அடிப்படையில் தி.மு.க, காங்கிரஸ், இடதுசாரிகள், விடுதலை சிறுத்தைகள் உள்ளடக்கிய இண்டியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும்படி நானறிந்த, என்னை அறிந்த அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அந்த பதிவில் அவர் தெரிவித்துள்ளார்.

# பாராளுமன்ற தேர்தல்களம் 2024

## தமிழையும், தமிழரையும் நேசிக்கும் ஆட்சி டெல்லியில் அமைய வேண்டும்

### வீடியோ மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

**சென்னை,ஏப் 18-**

தமிழையும், தமிழரையும் உண்மையாக நேசிக்கும் ஆட்சி டெல்லியில் அமைய வேண்டும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. ஆட்சியின் திட்டங்களை பட்டியலிட்டு, வேட்பாளர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியிருப்பதாவது.

ஏப்ரல் 19-ம் தேதி நம் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்க போகிற நாள், நாட்டின் எதிர்காலம் உங்கள் கையில்தான் இருக்கிறது. உங்கள் வாக்கு கடந்த 10 ஆண்டுகளாக இந்தியாவை நாசமாக்கிய பாசிச பா.ஜ.க. ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

இந்தியாவில் ஜனநாயகம் இருக்க வேண்டுமா, வேண்டாமா? என்பதை முடிவு செய்யும் தேர்தல் இது. அரசியல் சட்டத்தை காப்பாற்ற நடக்கின்ற தேர்தல். சாதி, மதம் கடந்து மக்களை ஒற்றுமையாக வாழ உங்கள் வாக்குதான் வலிமையான ஆயுதம். நாட்டை காக்க, நாளைய தலைமுறையை காக்க இண்டியா கூட்டணி சின்னங்களுக்கு வாக்களிக்க வேண்டும். தமிழகத்தை வஞ்சித்த பா.ஜ.க.வையும், தமிழகத்தை பாழ்படுத்திய அ.தி.மு.க.வையும் ஒருசேர வீழ்த்த வேண்டும்.

தமிழகத்திற்கு சிறப்பு திட்டங்கள் கிடைக்க, தமிழையும், தமிழரையும் உண்மையாக நேசிக்கும் ஆட்சி டெல்லியில் அமைய வேண்டும். தமிழகத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் உற்ற துணையாக இருக்கும், உங்கள் திராவிட அரசின் சாதனைகள் இந்தியா முழுக்க எதிரொலிக்க இண்டியா கூட்டணிக்கு ஆதரவு தாருங்கள் என இருகரம் கூப்பி கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அந்த வீடியோவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## பாராளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வை வீழ்த்த வேண்டும்

### நடிகர் பிரகாஷ்ராஜ் பதிவு

**பெங்களூரு, ஏப். 18-**

நாட்டின் ஜனநாயகத்தை காக்க மோடியை வீழ்த்த வேண்டியது அவசியம் என்றும் பாராளுமன்றத் தேர்தலில் பாஜகவை வீழ்த்த நடிகர் பிரகாஷ்ராஜ் அழைப்பு விடுத்துள்ளார்.

பாராளுமன்ற மக்களவைத் தேர்தல் ஏப்ரல் 19 ஆம் தேதி தொடங்கி ஜூன் 1ஆம் தேதி வரை ஏழு கட்டங்களாக நடைபெற உள்ளது. அதன்படி முதற்கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற உள்ள தொகுதிகளில் தேர்தல் பரப்புரை நேற்று (17.04.2024) மாலை 6 மணியுடன் நிறைவு பெற்றது. மேலும் இதற்கான வாக்கு எண்ணிக்கை ஜூன் 4-ம் தேதி நடைபெறவுள்ளது. இந்த நிலையில் 'தேசத்தின் துயரக் குரல்' என்ற தலைப்பில், ஒப்பாரி வடிவிலான பிரச்சாரப் பாடல் வெளியாகி, இந்திய அளவில் வைரலாகி வருகிறது. இப்பாடலை புத்தர் கலைக் குழுவைச் சேர்ந்த மகிழினி மணிமாறன் பாடியுள்ளார். இப்பாடல் சமூக வலைத்தளங்களில் பலரும் பகிர்ந்து வருகின்றனர். அந்த வகையில் நடிகர் பிரகாஷ் ராஜ். இப்பாடலை அவரது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்து. "இது ஜனநாயகத்திற்கும் பாசிசத்திற்கும் நடக்கும் தேர்தல். எதை நாம் தேர்ந்தெடுக்க போகிறோம்?" என பதிவிட்டுள்ளார். மேலும் நாட்டின் ஜனநாயகத்தை காக்க மோடியை வீழ்த்த வேண்டியது அவசியம் என்றும் பாராளுமன்றத் தேர்தலில் பாஜகவை வீழ்த்த நடிகர் பிரகாஷ்ராஜ் அழைப்பு விடுத்துள்ளார்.

## 60 ஆண்டுகளில் காங்கிரசால் முடியாததை 10 ஆண்டுகளில் செய்து முடித்துள்ளேன்

### அசாமில் பிரதமர் மோடி பெருமிதம்

**அசாம், ஏப் 18-**

காங்கிரஸ் கட்சி பிரிவினைவாதத்தை தூண்டியது. ஆனால், நான் பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்புக்காக உழைத்தேன். 60 ஆண்டுகளில் காங்கிரஸ் கட்சியால் செய்ய முடியாததை 10 ஆண்டுகளில் செய்து முடித்தேன் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, அசாமின் நல்பாரி மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது.

2014-ல் நம்பிக்கையையும், 2019-ல் உறுதியான உணர்வையும் கொண்டு வந்தேன். தற்போது அசாம் மண்ணுக்கு 2024-ஆம் ஆண்டு உத்தரவாதத்தை கொண்டு வந்துள்ளேன். இது மோடியின் கேரண்டி. அடுத்த ஐந்து ஆண்டுகளில், பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் 3 கோடி புதிய வீடுகள் கட்டித் தரப்படும். அடுத்த ஐந்து ஆண்டுகளில் அனைத்து பயனாளிகளுக்கும் இலவச ரேஷன் தொடர்ந்து விநியோகிக்கப்படும். தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் கொள்கைகளை அமல்படுத்துவதில் எந்தவித பாரபட்சமும் இல்லை. அதன் பலன்கள் அனைத்து குடிமக்களையும் சென்றடையும்.

70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள் அனைவருக்கும் ஆயுஷ்மான் யோஜனா திட்டத்தின் கீழ் 5 லட்சம் ரூபாய் வரை இலவச சிகிச்சை அளிக்கப்படும். இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதில் பாரபட்சம் இருக்காது. நாடு முழுவதும் மோடியின் உத்தரவாதம் நடைமுறைபடுத்தப்பட்டுவருகிறது மோடியின் உத்தரவாதத்துக்கு வடகிழக்கு பகுதிகளே சாட்சி.

காங்கிரஸ் கட்சியால் வடகிழக்கு மாநிலங்களுக்கு பிரச்சினைகள் மட்டுமே கொடுக்க முடிந்தது. காங்கிரஸ் பிரிவினைவாதத்தை தூண்டியது. ஆனால், நான் பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்புக்காக உழைத்தேன். 60 ஆண்டுகளில் காங்கிரஸ் கட்சியால் செய்ய முடியாததை 10 ஆண்டுகளில் செய்து முடித்தேன்'' என்றார். அசாமில் உள்ள 14 தொகுதிகளுக்கான மக்களவைத் தேர்தல் 19-ம் தேதி தொடங்கி 3 கட்டங்களாக நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.

## கோவையில் அ.தி.மு.க. வேட்பாளரை ஆதரித்து நடிகர் கார்த்திக் வாக்கு சேகரிப்பு

**கோவை, ஏப் 18-**

கோவை தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் சிங்கை ராமச்சந்திரனை ஆதரித்து நடிகர் கார்த்திக் பிரச்சாரம் மேற்கொண்டார். .தமிழகத்தில் நாளை பாராளுமன்ற மக்களவை தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு அரசியல் கட்சியினர் இறுதிக்கட்ட வாக்கு சேகரிப்பில் தீவிரமாக ஈடுபட்டனர்.

அந்த வகையில் கோவை தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் சிங்கை ராமச்சந்திரனை ஆதரித்து நடிகர் கார்த்திக் நேற்று பிரச்சாரம் மேற்கொண்டார். கோவை சூளூர் பகுதியில் நடைபெற்ற பிரச்சாரத்தின்போது பேசிய அவர்,

நம்முடைய எதிர்காலம், அடுத்த 5 ஆண்டுகளை பார்த்துக் கொள்ளப்போவது அ.தி.மு.க.தான். கோவை தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் சிங்கை ராமச்சந்திரனை பாராளுமன்றத்திற்கு அனுப்பி, அதன் பலனை மக்கள் பெற வேண்டும் என்று தெரிவித்தார்.

## 150 தொகுதிகளுக்கு மேல் பா.ஜ.க வெற்றி பெறாது

### ராகுல் காந்தி பரபரப்பு பேட்டி

**காசியாபாத், ஏப் 18-**

மக்களவை தேர்தலில் 150 தொகுதிகளுக்கு மேல் பா.ஜ.க.விற்கு வெற்றி கிடைக்காது என்று ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற மக்களவை தேர்தலை முன்னிட்டு, உத்தர பிரதேசத்தின் காசியாபாத் நகரில் நடந்த பத்திரிகையாளர்கள் சந்திப்பில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி நேற்று கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது,

இந்த தேர்தல் கருத்தியல் சார்ந்தது. ஒருபுறம் ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.க.வினர் ஆகியோர் அரசியல் சாசனம் மற்றும் ஜனநாயக நடைமுறையை அழிக்க முயற்சித்து வருகின்றனர். மறுபுறம், இண்டியா கூட்டணி மற்றும் காங்கிரஸ் கட்சியினர் இணைந்து, அரசியலமைப்பு மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றை பாதுகாக்க முயற்சித்து கொண்டிருக்கிறோம்.

இந்த தேர்தலில் 2 முதல் 3 பெரிய விவகாரங்கள் முன்னே உள்ளன. இதில், வேலைவாய்ப்பின்மை மிக பெரியது. பணவீக்கம், 2-வது பெரிய விவகாரம். ஆனால், பா.ஜ.க.வோ இவற்றில் இருந்து திசை திருப்பும் வேலையில் ஈடுபட்டு வருகிறது. இந்த விவகாரங்கள் பற்றி பிரதமரோ அல்லது பா.ஜ.க.வோ பேசுவதேயில்லை என்று தெரிவித்தார்.

அதை தொடர்ந்து மக்களவை தேர்தலின் முடிவு பற்றி எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளித்த ராகுல் காந்தி, தொகுதிகளை பற்றி நான் கணிக்க முடியாது. 15 முதல் 20 நாட்களுக்கு முன் பா.ஜ.க. 180 தொகுதிகளில் வெற்றி பெறும் என நான் நினைத்தேன். ஆனால், 150 தொகுதிகளுக்கு மேல் அவர்களுக்கு வெற்றி கிடைக்காது என்றே தற்போது நினைக்கிறேன்.

ஒவ்வொரு மாநிலத்திலும் இருந்து வரும் அறிக்கைகளில், நாங்கள் முன்னேறி வருகிறோம் என தெரிய வந்துள்ளது. உத்தர பிரதேசத்தில் ஒரு வலுவான கூட்டணி உள்ளது. நாங்கள் சிறந்த முறையில் வெற்றி பெறுவோம் என்று கூறினார்.

## வாக்குப்பதிவு எந்திரங்கள் மையங்களுக்கு செல்லும் வரை விழிப்புடன் இருங்கள்

### அ.தி.மு.க.வினருக்கு எடப்பாடி வேண்டுகோள்

**சென்னை, ஏப் 18-**

வாக்குப்பதிவு எந்திரங்கள் மையங்களுக்கு செல்லும் வரை விழிப்புடன் இருந்து பணியாற்றுமாறு அ.தி.மு.க.வினருக்கு பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

பாராளுமன்ற தேர்தலையொட்டி, தமிழர் உரிமை மீட்போம், தமிழ்நாடு காப்போம், ஓற்றை விரலால் ஓங்கி அடிப்போம் என்ற தாரக மந்திரத்தை குறிக்கோளாகக் கொண்டு தமிழகம் மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட 40 தொகுதிகளுக்கும் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டேன்.

எனது இந்த சுற்றுப் பயணத்தின் போது, மக்களைப் பாதுகாக்கும் ஒரே இயக்கம் அ.தி.மு.க. தான் என்பதை நிரூபிக்கின்ற வகையில் கோடானு கோடி மக்கள் திரண்டிருந்து, எங்கள் வாக்கு இரட்டை இலைக்கே, முரசு சின்னத்திற்கே என விண்ணதிர முழக்கமிட்டது இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

கட்சியின் உடன்பிறப்புகளும், தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்களும், வாக்குப்பதிவு நடைபெறும் இடங்களில் வாக்குச்சாவடிக்கு வரும் பொதுமக்களிடம் பண்போடும், பாசத்தோடும் அ.தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்களிக்கக் கோர வேண்டும்.

மேலும், நம் முகவர்கள் வாக்குப் பதிவை உன்னிப்பாக கண்காணிக்க வேண்டும். வாக்குப் பதிவு நாளன்று வாக்காளப் பெருமக்கள் அனைவரும் அன்று காலை 7 மணி முதலே வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்குமாறு செய்திடல் வேண்டும்.

வாக்குப்பதிவு நிறைவு பெற்று அதனை சீலிட்டு வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டுசென்று சேர்க்கும் வரையிலும் மிகவும் கவனமாகவும், விழிப்புடனும் இருந்திடல் வேண்டும்.

எனதருமை வாக்காளப் பெருமக்களே, அ.தி.மு.க.சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு எம்.ஜி.ஆர். அம்மா ஆகியோரின் வெற்றிச் சின்னமாம் 'இரட்டை இலை' சின்னத்திலும், தே.மு.க.வின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு முரசு சின்னத்திலும், விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளருக்கு இரட்டை இலை சின்னத்திலும், உங்களது பொன்னான வாக்குகளை அளித்து, வேட்பாளர்கள் அனைவரையும் மகத்தான வெற்றி பெறச் செய்து, புதிய வரலாற்றுச் சாதனையை படைத்திட வேண்டும் என்று, வாக்காளப் பெருமக்களாகிய உங்கள் அனைவரையும் இருகரம் கூப்பி மிகுந்த பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ஜூன் 4-ம் தேதியிலிருந்து 500 நாட்களில்

## கோவையில் 100 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்: அண்ணாமலை

**கோவை, ஏப் 18-**

ஜூன் 4-ம் தேதியிலிருந்து 500 நாட்களில் கோவையில் 100 வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்று அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது,

பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகும், ஜூன் 4-ம் தேதியிலிருந்து 500 நாட்களில், கோயம்புத்தூர் பாராளுமன்றத் தொகுதியின், அடிப்படைத் தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட, குடிதண்ணீர்ப் பிரச்சினை, உட்கட்டமைப்பு, விசைத்தறி, விவசாயப் பிரச்சினைகள் என அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண, பாரதப் பிரதமர் மோடி ஆதரவுடன், பா.ஜ.க. சார்பாக வழங்கப்பட்டுள்ள நூறு வாக்குறுதிகளையும் நிறைவேற்றி, கோவையை மீண்டும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வோம் என்று உறுதி அளிக்கிறேன்.

நமது பாரதப் பிரதமர் மோடி, 400 இடங்களுக்கும் மேல் வெற்றி பெற்று, மூன்றாவது முறையாக மீண்டும் பிரதமர் பொறுப்பேற்கும் போது, கோயம்புத்தூர் மற்றும் நகரத்தைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளும், நகரத்தின் அடிப்படை வசதிகள் அனைத்தும் பெற்று வளர்ச்சி பெற, மத்திய அரசின் திட்டம் முழுமையாக மக்களைச் சென்று சேர்வதை கண்காணிக்க, கேள்வி கேட்க, நமது குழந்தைகளின் எதிர்காலம் நன்றாக அமைய, அவர்கள் அடுத்த 25 ஆண்டுகளில், வளர்ச்சி பெற்ற இந்தியாவில் வசிக்க, உங்கள் அன்புத் தம்பி, உங்கள் வீட்டுப் பிள்ளை, அண்ணாமலை ஆகிய எனக்கு, கோவை பாராளுமன்றத் தொகுதியில், கட்சி வேறுபாடின்றி தாமரை சின்னத்தில் வாக்களித்து, பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அந்த பதிவில் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

## எல்லோருக்கும் சமமான கல்வி கிடைக்க இண்டியா கூட்டணிக்கு வாக்களியுங்கள்

### கனிமொழி எம்.பி. வேண்டுகோள்

**திருச்செந்தூர், ஏப் 18-**

எல்லோருக்கும் சமமான கல்வியை தருவதற்காக இண்டியா கூட்டணிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று திருச்செந்தூரில் கனிமொழி எம்.பி. பிரச்சாரம் மேற்கொண்டார்.

தி.மு.க. துணை பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி. நேற்று காலை திருச்செந்தூரில் பிரச்சாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது:-

ஏழை, எளிய, நடுத்தர மாணவர்களை நுழைவுத் தேர்வு கொண்டு வந்து படிக்க விடாமல் தடுக்கிறார்கள். ஆதிக்க சக்தியை மீண்டும் கொண்டுவர முயற்சி செய்கிறார்கள். அதை தடுக்க நீங்கள் உதயசூரியனுக்கு வாக்களிக்க வேண்டும்.

எல்லோருக்கும் சமமான கல்வியை தருவதற்காக இண்டியா கூட்டணிக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும். இந்த தேர்தலில் எடப்பாடி பழனிசாமிக்கு தகுந்த பாடம் புகட்ட வேண்டும். முதல்வர் மு.க. ஸ்டாலின் மகளிர் உரிமைத்தொகை வழங்கி வருகிறார். இதுவரை வழங்கப்படாத பெண்களுக்கு தேர்தல் முடிந்ததும் உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சுங்கச்சாவடிகள் மூடப்படும். ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ.75-க்கும், டீசல் ரூ.65-க்கும் வழங்கப்படும். திருச்செந்தூர் கோவிலில் அரசின் சார்பில் ரூ.100 கோடி, தனியார் பங்களிப்பாக ரூ.200 கோடி என ரூ.300 கோடியில் உலகமே வியக்கும் வகையில் திருப்பதி கோவிலை விட மேலாக சாமி தரிசனம் செய்வதற்கு தரம் உயர்த்தப்பட பெறும் திட்ட வளாகப்பணி நடந்து வருகிறது. இந்த பணியை தந்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின். இந்த பகுதி மக்களுக்காக குடிநீர் வசதியை மேம்படுத்த ரூ.500 கோடியில் சரி செய்ய முதல்வர் ஒப்புதல் தந்துள்ளார். இந்த திட்டம் தேர்தல் முடிந்ததும் தொடங்கப்படும்.

திருச்செந்தூர் பகுதியில் நகராட்சி அருகே உள்ள சாக்கடை கால்வாயை சுத்தப்படுத்தி அதை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் நகராட்சி சொத்து வரி குறைக்கப்படும்.

தூத்துக்குடி எனது 2-வது தாய் வீடு. எனவே அனைத்து நல்ல திட்டங்களை செய்ய எனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து என்னை அமோக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், ஊர்வசி அமிர்தராஜ் எம்.எல்.ஏ., தூத்துக்குடி மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஆர்ஜித சேவை டிக்கெட் இன்று வெளியீடு

**திருமலை, ஏப் 18-**

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஆர்ஜித சேவைக்கான டிக்கெட்டுகள் இன்று (வியாழக்கிழமை) காலை 10 மணிக்கு ஆன்லைனில் வெளியிடுகிறது.

இந்த சேவை டிக்கெட்டுகளை வரும் 20-ம் தேதி காலை 10 மணி வரை பதிவு செய்யலாம். அன்றைய தினம் மதியம் 12 மணிக்கு லக்கி டிப்பில் டிக்கெட் ஒதுக்கப்படும். இந்த டிக்கெட்டுகளை பெற்றவர்கள் பணத்தை செலுத்தி டிக்கெட்டை பெறலாம்.

இதே போல், கல்யாண உற்சவம், ஊஞ்சல் சேவை, ஆர்ஜித பிரம்மோற்சவம், சஹஸ்ரதிபாலங்கர சேவா டிக்கெட்டுகள் வரும் 22-ம் தேதி காலை 10 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படும். உற்சவ சேவைகளுக்கான ஜூலை மாத ஒதுக்கீடு, அவற்றின் தரிசன ஸ்லாட்டுகள் 22-ம் தேதி மாலை 3 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படுகிறது.

அங்க பிரதடசணத்திற்கான டோக்கன்கள் 23-ம் தேதி காலை 10 மணிக்கும், ஸ்ரீவாணி டிரஸ்ட் டிக்கெட்டுகள் 11 மணிக்கும் வெளியிடப்படுகிறது. முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் தீராத நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இலவச சிறப்பு தரிசன டோக்கன்கள் ஒதுக்கீடு 23-ம் மாலை 3 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படுகிறது.

சிறப்பு நுழைவு தரிசன டிக்கெட்டுகள் 24-ம் தேதி காலை 10 மணிக்கு வெளியிடப்படுகிறது. மாலை 3 மணிக்கு திருமலை மற்றும் திருப்பதியில் அறை ஒதுக்கீடு வெளியிடப்படுகிறது. ஸ்ரீவாரி சேவை ஒதுக்கீடு 27-ம் தேதி காலை 11 மணிக்கும், நவநீத சேவை மதியம் 12 மணிக்கும், பரகாமணி சேவை 1 மணிக்கும் ஆன்லைனில் வெளியிடப்படுகிறது. பக்தர்கள் இவற்றை கவனத்தில் கொண்டு டிக்கெட் முன்பதிவு செய்து கொள்ளுமாறு தேவஸ்தானம் கேட்டுக்கொண்டுள்ளது.

## பணப்பட்டுவாடா குறித்த புகார்: புதுவையில் தேர்தலை ரத்து செய்யக்கோரி அ.தி.மு.க.வினர் திடீர் தர்ணா

**புதுச்சேரி, ஏப் 18-**

பணப்பட்டுவாடாவை தடுக்காததை கண்டிப்பதாக கூறி புதுச்சேரியில் தேர்தல் அதிகாரி அறை முன்பு அ.தி.மு.க. மாநிலச் செயலர், வேட்பாளர் ஆகியோர் தர்ணா போராட்டம் நடத்தினர்.

புதுவை மக்களவைத் தொகுதியில் பா.ஜ.க., காங்கிரஸ், அ.தி.மு.க. இடையே மும்முனை போட்டி நிலவுகிறது. வேட்புமனு தாக்கலுக்கு பிறகு கடந்த 15 நாட்களாக அரசியல் கட்சியினர் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்தனர். பிரச்சாரத்தில் அ.தி.மு.க. மாநில செயலாளர் அன்பழகன், பா.ஜ.க.வுக்கு கண்டெய்னரில் பணம் வந்திருப்பதாக புகார் தெரிவித்தார். தொடர்ந்து காங்கிரசுக்கும் கட்சி தலைமையில் இருந்து பணம் வந்துள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டி பிரச்சாரம் செய்தார்.

தேர்தல் வாக்குப் பதிவு நடைபெற உள்ள நிலையில், புதுவை முழுவதும் தடையின்றி பண பட்டுவாடா நடைபெறுவதாக அ.தி.மு.க. மாநில செயலாளர் அன்பழகன் குற்றம்சாட்டினார். கடந்த 3 நாட்களாக பா.ஜ.க. சார்பில் வாக்குக்கு ரூ.500, காங்கிரஸ் சார்பில் ரூ.200 விநியோகம் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் புகார் செய்தார்.

இந்த நிலையில் நேற்று காலையில் இறுதி நாள் பிரச்சாரத்தையொட்டி அ.தி.மு.க.வின் வாகன பேரணி நடந்தது. மாநிலச் செயலர் அன்பழகன் தலைமையில் நடந்த ஊர்வலத்தோடு கலெக்டர் அலுவலகத்துக்கு அவர் சென்றார். ஊர்வலத்தில் வந்தவர்கள் பண பட்டுவாடாவை தடுக்க கோஷம் எழுப்பியபடி கலெக்டர் அலுவலகத்துக்குள் நுழைந்தனர். அவர்களை போலீசார் தடுத்து நிறுத்தினர்.

இருப்பினும் மாநிலச் செயலர் அன்பழகன், வேட்பாளர் தமிழ் வேந்தன் மற்றும் முக்கிய நிர்வாகிகளை போலீசார் கலெக்டர் அலுவலகத்துக்குள் அனுமதித்தனர். அவர்கள் நேரடியாக முதல் மாடியில் உள்ள மாவட்ட தேர்தல் அதிகாரி அறைக்கு சென்றனர்.

மாவட்ட அதிகாரி குலோத்துங்கன் ஆலோசனைக் கூட்டத்தில் இருந்ததால் போலீசார் அவர்களை உள்ளே அனுமதிக்கவில்லை. இதனால், அதிகாரியின் அறை முன்பு அ.தி.மு.க.வினர் தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை போலீசார் சமாதானப்படுத்தினர்.

தர்ணாவில் ஈடுபட்ட அ.தி.மு.க. மாநில செயலாளர் அன்பழகன் கூறுகையில், வாக்காளர்களுக்கு பண பட்டுவாடா நடப்பது தொடர்பாக 2 முறை புதுவை தேர்தல் துறைக்கு புகார் செய்தோம். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால் இந்திய தேர்தல் ஆணையத்துக்கும் புகார் மனு அனுப்பியுள்ளோம். ஆனாலும் பண பட்டுவாடா தொடர்ந்து நடந்து வருகிறது. குறிப்பிட்ட சில இடங்களை கூறி பணம் பட்டுவாடா குறித்து தகவல் அளித்தோம்.

அப்போது அதிகாரிகள், அந்த பகுதி தங்களை சேர்ந்தது இல்லை எனக் கூறி தட்டிக் கழிக்கின்றனர். தேர்தல் நியாயமான முறையில் நடைபெறும் என எங்களுக்கு நம்பிக்கையில்லை.

வேட்பாளர் உள்துறை அமைச்சராக இருப்பதால் அவருக்கு அரசு எந்திரமும், காவல் துறையும் சாதகமாக செயல்படுகிறது. இதனால் தேர்தலை ரத்து செய்ய வேண்டும். இந்திய தேர்தல் ஆணையத்தின் நேரடி கட்டுப்பாட்டில் தேர்தலை நடத்த வேண்டும் என்றார்.

இதையடுத்து தேர்தல் அதிகாரி அழைத்தால் தர்ணா போராட்டத்தை கைவிடுவதாக தெரிவித்து அறைக்குள் சென்று சந்தித்து மனு கொடுத்தனர்.

## தமிழகத்தில் 23-ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்பு: சென்னை வானிலை மையம் தகவல்

**சென்னை,ஏப் 18-**

தமிழகத்தில் வரும் 23-ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று (18.04.2024) வட தமிழக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். நாளை (19.04.2024) தமிழக உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். வரும் 20-ம் தேதி முதல் 23-ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

அதிகபட்ச வெப்பநிலை 37-38 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 26-27 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## சிறையில் இருந்தே ஆட்சி செய்ய கெஜ்ரிவாலை அனுமதிக்க வேண்டும்

### டெல்லி ஐகோர்ட்டில் ஆம்ஆத்மி மனு


**புதுடெல்லி, ஏப். 18-**

சிறையில் இருந்து ஆட்சி செய்ய கெஜ்ரிவாலுக்கு அனுமதி அளிக்க வேண்டும் என டெல்லி ஐகோர்ட்டில் ஆம்ஆத்மி கட்சி மனுத்தாக்கல் செய்துள்ளது.

டெல்லி மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் டெல்லி முதல்வர் கெஜ்ரிவாலை அமலாக்கத்துறை கைது செய்துள்ளது. தற்போது கெஜ்ரிவால் திஹார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் திஹார் சிறையில் இருந்தபடி டெல்லியை ஆட்சி செய்ய முதல்வர் கெஜ்ரிவாலுக்கு அனுமதி அளிக்க கோரி, டெல்லி ஐகோர்ட்டில், ஆத் ஆத்மி கட்சி சார்பில், வழக்கறிஞர் ஸ்ரீகாந்த் பிரசாத் என்பவர் மனுத்தாக்கல் செய்துள்ளார்.


மனுவில், கெஜ்ரிவால் சிறையில் இருந்தபடி காணொலி வாயிலாக அமைச்சரவை கூட்டத்தை நடத்த அனுமதி அளிக்க வேண்டும். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் எனக் கூறப்படுகிறது.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....




400 தொகுதிகளை கைப்பற்றுவோம் என்று பா.ஜ.க.வினர் சொல்கின்றனர். எதன் அடிப்படையில் இது சொல்லப்பட்டது? அப்படி சொல்பவர்கள் ஒன்று ஜோசியராக இருக்க வேண்டும், இல்லையெனில் தில்லுமுல்லு வேலையை பார்த்து வைத்திருக்க வேண்டும். தேர்தலில் தில்லுமுல்லு எதுவும் நடக்காமல் இருந்தால் பா.ஜ.க. 180 தொகுதிகளை கூட தாண்டாது.

- பிரியங்கா காந்தி




தமிழின் மீது பாசம் காட்டுவதாக பிரதமர் மோடி வேஷம் போடுகிறார். செம்மொழியான தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு நிதியாக ரூ.74 கோடியை ஒதுக்கினார். ஆனால் பேச்சு வழக்கில் இல்லாத சமஸ்கிருத மொழிக்கு ரூ.1487 கோடியை ஒதுக்கியுள்ளார். இதுதான் பிரதமர் மோடி தமிழ் மொழியின் மீது காட்டும் அக்கறையா?.

- தமிமுன் அன்சாரி



உத்தரபிரதேசத்தில் உள்ள 80 தொகுதிகளிலும் பா.ஜ.க.வை தோற்கடிப்போம் என்று நம்புகிறேன். பா.ஜ.க.வினர் 400க்கு மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற போவதில்லை. தோற்கப் போகிறார்கள். அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றவேண்டும் என கனவு காண்பவர்களை 400 இடங்களில் தோற்கடிக்க வேண்டும்.

- அகிலேஷ் யாதவ்



எந்த ஒரு அரசும் 10 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சியில் நீடிக்கக் கூடாது. எண்ணம், கொள்கையில் மாற்றம் கொண்ட அரசு அமைய வேண்டும். பா.ஜ.க. 420 முதல் 430 இடங்களில் மட்டுமே போட்டியிடுகிறது. தமிழகத்தில் பா.ஜ.க. 25 தொகுதிகளில் போட்டியிடுகிறது. தமிழகத்தில் 25 தொகுதிகளையும் இழந்தால் 400 தொகுதிகளை எப்படி வெல்வார்கள்?

- ப.சிதம்பரம்

விருதுநகர் காங். வேட்பாளர் ப.மாணிக்கம்தாகூரை ஆதரித்து

# அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் இறுதிகட்ட பிரச்சாரம்



திருமங்கலம்.ஏப்ரல்.18.

விருதுநகர் நாடாளுமன்ற தொகுதியில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் ப.மாணிக்கம்தாகூரை ஆதரித்து தமிழக பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஆகியோர் டி.கல்லுப்பட்டி பகுதியில் இறுதிகட்ட பிரச்சாரம் மேற்கொண்டு தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

விருதுநகர் நாடாளுமன்ற தொகுதியில் தி.மு.க தலைமையிலான இந்தியா கூட்டணியின் காங்கிரஸ் கட்சி வேட்பாளராக போட்டியிடும் ப.மாணிக்கம் தாகூரை ஆதரித்து விருதுநகர் தொகுதிக்கு உட்பட்ட 6சட்டமன்ற தொகுதிகளிலும் அனல் பறக்கும் பிரச்சாரம் நடைபெற்று வருகிறது.இந்த பிரச்சாரத்தின் நிறைவு பகுதியாக நேற்று விருதுநகர் நாடாளு மன்ற தொகுதிக்கு உட்பட்ட திருமங்கலம் சட்டமன்ற தொகுதி டி.கல்லுப்பட்டியில் தமிழக பத்திர பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஆகியோர் ஆயிரக் கணக்கானோர் புடைசூழ ஊர்வலமாக பேருந்து நிலையப்பகுதிக்கு வருகை தந்து இறுதிகட்ட பிரச்சாரம் மேற்கொண்டு திறந்த வேனில் இருந்தபடி தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டு உரையாற்றினர்கள். அப்போது அமைச்சர் பி.மூர்த்தி பேசிய தாவது: பொதுமக்களின் வாழ்வு வளம் பெற்றிடும் வகையில் தமிழக முதலமைச்சர் பல்வேறு சரித்திர சாதனை திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் இந்தியாவிலுள்ள முதல்வர்களுக் கெல்லாம் முன்னோடியாக நமது முதலமைச்சர் செயல்படுகிறார். இந்தியா கூட்டணியின் தேர்தல் அறிக்கை மக்களின் நலன் கருதி தயாரிக்கப் பட்ட ஒன்றாகும்.திருமங்கலம் சட்டமன்ற தொகுதி தான் நமது வேட்பாளர் மாணிக்கம் தாகூருக்கு அதிக வாக்குகள் பெற்றுத்தரும் தொகுதியாக திகழ்ந்திடும். இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வருகையில் ராகுல்காந்தியின் ஆசி பெற்ற வேட்பாளர் மாணிக்கம்தாகூர் அமைச்சராக வந்து நமது பகுதியை வளம் பெறச் செய்திடுவார் என்று பேசினார். இந்நிகழ்ச்சியில் திருமங்கலம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் சாயல்குடி இராமர்,ஒன்றிய கழக செயலாளர்கள் பா.மதன் குமார், நாக ராஜ், பாண்டியன், திருமங்கலம் நகர்மன்ற துணைத்தலைவர் ஆதவன் அதியமான் மற்றும் தி.மு.க நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



அருப்புக்கோட்டை நகரில் அமைச்சர் கே கே எஸ் ஆர் ராமச்சந்திரன் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் மாணிக்கம் தாகூருக்கு இறுதிக்கட்ட பிரசாரத்தில் கை சின்னத்திற்கு வாக்கு சேகரித்த போது எடுத்த படம். அருகில் வேட்பாளர் மாணிக்கம் தாகூர், அருப்புக்கோட்டை முன்னாள் நகரமன்ற தலைவர் சிவப்பிரகாசம் ஆகியோர் உள்ளனர்.

# இந்தியாவிலேயே முதன்முறையாக காலை உணவு திட்டத்தை செயல்படுத்தியது தமிழக அரசுதான்

## அமைச்சர் அர. சக்கரபாணி பேச்சு



ஒட்டன்சத்திரம் .ஏப்.18.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் இந்தியா கூட்டணியின் திண்டுக்கல் நாடாளுமன்ற தொகுதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் ஆர். சச்சிதானந்தத்தை ஆதரித்து நடைபெற்ற இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது.

தமிழகத்தில் சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றி பொற்கால ஆட்சியை நடத்தி வருகிறார் தமிழக முதலமைச்சர். இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில் தான் காலை உணவு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஒட்டன்சத்திரம் தொகுதியில் நடைபெற்று வரும் கூட்டு குடிநீர் திட்ட பணி நிறைவு பெற்றால் 30 ஆண்டுகளுக்கு குடிநீர் பிரச்சனையே இருக்காது. தமிழகத்தை வஞ்சிக்கும் பாஜக அரசை அகற்ற இந்தியா கூட்டணியின் வேட்பாளர் சச்சிதானந்தனத்திற்கு அரிவாள், சுத்தியல், நட்சத்திரத்திரம் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என பேசினார்.

நிகழ்வில் நகர செயலாளர் வெள்ளைச்சாமி, மாவட்ட அவை தலைவர் மோகன் ,ஒட்டன்சத்திரம் தொகுதி பொறுப்பாளர் முனவர் ஜான், ஒன்றிய செயலாளர்கள் ஜோதீஸ்வரன், தர்மராஜன், நகர்மன்ற தலைவர் திருமலைச்சாமி, செயற்குழு உறுப்பினர் கண்ணன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் முருகானந்தம், சிவக்குமார் ,சிவபாக்கியம் ராமசாமி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாண்டியராஜன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் அசோக் வேலுச்சாமி, முருகானந்தம் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர் இறுதியில் மார்க் சிஸ்ட்கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய செயலாளர் சிவமணி நன்றி கூறினார்



விருதுநகர் நாடாளுமன்ற தொகுதியில் அ.தி.மு.க கூட்டணி சார்பில் போட்டியிடும் தே.மு.தி.க வேட்பாளர் விஜய பிரபாகரனை ஆதரித்து திருமங்கலத்தில் அ.தி.மு.க நகர் கழகச் செயலாளர் ஜே.டி.விஜயன் தலைமையில் அ.தி.மு.க மற்றும் தே.மு.தி.க நிர்வாகிகள், தொண்டர்கள்வீடுவீடாகச்சென்றுபிரச்சாரம்மேற்கொண்டுவாக்குச்சேகரிப்பில்ஈடுபட்டனர்

# அழகருக்காக வைகை ஆற்றில் நாளை தண்ணீர் திறப்பு

மதுரை, ஏப்.18-

மதுரையின் மகத்தான சித்திரைப் பெருவிழா கடந்த 12-ம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கி நடந்து வருகிறது. 12 நாட்கள் மீனாட்சி கோவில் திருவிழாவுடன், 10 நாட்களின் அழகர்கோவில் திருவிழாவும் கைகோர்த்து மதுரை நகர், புறநகர் பகுதிகளில் கொண்டாட்டம் கொள்ளும். இவ்வகையில் ஒரே நேரத்தில் 12 லட்சம் மக்கள் ஓரிடத்தில் கூடும் ஓர் ஒப்பற்ற விழாவாக கள்ளழகர் வைகையாற்றில் இறங்கும் நிகழ்ச்சி வரும்.23-ம் தேதி நடக்கிறது. ஆண்டுதோறும் இதற்கென வைகை அணையிலிருந்து ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்படும். இதையொட்டி மதுரை கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்வுக்கென தேர்தல் நாளான நாளை.19-ம் தேதி யன்று தண்ணீர் திறந்துவிடப்படும் என்று பொதுப்பணித் துறை அறிவித்துள்ளது. இது மதுரை மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியுள்ளது. இதற்கிடையில் ஆற்றில் தண்ணீர் முறையாக வந்து சேரும் வகையில் ஆற்றுக்கரை பகுதிகளை பொதுப்பணித்துறை குழுவினர் தொடர்ந்து ஆய்வு செய்து வருகின்றனர்.



அருப்புக்கோட்டைவட்டாட்சியர்அலுவலகத்தில்மக்களவை தேர்தலை முன்னிட்டு வாக்கு சாவடி மையங்களுக்கு தேவையான பொருட்களை ஒதுக்கீடு செய்யும் பணிகளை மாவட்டகலெக்டர்ஜெயசீலன்,நேரில்சென்றுபார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# நத்தத்தில் வாக்களிப்பதின் அவசியம் குறித்து பதாகைகள் மூலம் விழிப்புணர்வு



நத்தம், ஏப், 18

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பஸ் நிலையத்தில் தேர்தலில் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு முகாம் நடந்தது.

இதற்கு தாசில்தார் சுகந்தி தலைமை தாங்கினார். மண்டல துணை வட்டாட்சியர் சுந்தர் முன்னிலை வகித்தார்.இதில் பஸ் நிலைய பகுதியில் மனித சங்கிலி அமைத்து வண்ண பதாகைகள் மூலம் வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், நூறு சதவீதம் அனைவரும் வாக்களிக்க வேண்டும் எனவும், தேர்தல் திருவிழா, இது தேசத்தின் பெருவிழா என்றும் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி பேசப்பட்டது.இதில் தேர்தல் பிரிவு துணை வட்டாட்சியர் பிரேம்குமார், கிராம நிர்வாக அலுவலர் சுரேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சேவுகம்பட்டி பேரூராட்சி பகுதியில் 100 சதவீத வாக்குப்பதிவு உறுதிமொழி



வத்தலகுண்டு ஏப். 18-

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு அருகே சேவுகம்பட்டி பேரூராட்சியில் தேர்தல் திருவிழா, என் வாக்கு என் உரிமை, 100 சதவீத வாக்குப்பதிவு என மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேரூராட்சி அலுவலகம் முன்பு கோலம் போடப்பட்டது.

தேர்தல் இலக்கினை, வாக்குப்பதிவு எந்திரம், தேசியக்கொடி, ஆள்காட்டி விரலில் வாக்குப்பதிவு செய்வதற்கான அடையாளம் மையுடன் கூடிய கையின் இலச்சினை ஆகியவற்றை ஓவியங்களாக வரைந்திருந்தனர். இது குறித்துசெயல் அலுவலர் ரமேஷ்பாபு கூறுகையில், பாராளுமன்ற தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் இந்திய தேர்தல் ஆணையத்தால் வாக்குப்பதிவு குறித்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக இந்த விழிப்புணர்வுஓவியம்வரையப்பட்டுள்ளது என்றார். பின்னர் பேரூராட்சி அலுவலகம் முன்பு மகளிர் சுய உதவி குழு பெண்கள், பேரூராட்சி அலுவலகப் பணியாளர்கள், பொதுமக்கள் அனைவரும் 100 சதவீதம் வாக்களிப்போம் என்று உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

# குடிபோதையில் தகராறு: நண்பனை கழுத்து நெறித்து கொன்ற வாலிபர் கைது

வத்தலகுண்டு.ஏப்.18.

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு இலங்கை அகதிகள் முகாமில் குடியிருந்து வருபவர் தேவராஜ் மகன் அனந்தகுமார் இவர் அகதிகள் முகாமில் தனியாக குடியிருந்து வருகிறார். இவரும் திண்டுக்கல் அருகே உள்ள அகதிகள் முகாமில் குடியிருந்து வரும் நாகராஜ் என்பவரும் சேர்ந்து நண்பர்களாகினர். இருவரும் வத்தலகுண்டு இலங்கை அகதிகள் முகாமில் ஒரே அறையில் தங்கியிருந்தனர். இந்நிலையில் நண்பர்கள் இருவரும் நேற்று இரவு மது அருந்தி உள்ளனர். இதனால் ஏற்பட்ட தகராறு காரணமாக நாகராஜன் நண்பர் அனந்தகுமாரை குடிபோதையில் கழுத்தை நெரித்து கொலை செய்தார் அனந்தகுமார் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார் . தப்பி ஓடிய நாகராஜன் திண்டுக்கல்லில் கைது செய்யப்பட்டார். இந்த சம்பவம் தொடர்பாக வத்தலகுண்டு காவல் நிலைய ஆய்வாளர் சிலை மணி தலைமையில் சாரபு ஆய்வாளர் கணேசன் மற்றும் போலீசார் வழக்கு பதிவு செய்து அனந்தகுமார் பிரேதத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இந்த கொலை சம்பவம் தொடர்பாக போலீசார் தீவிர விசாரணை செய்து வருகின்றனர். உயிருக்கு உயிரான நண்பனே தனது நண்பனை குடிபோதையில் கழுத்தை நெரித்து கொலை செய்த சம்பவம் இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் கரூர் நாடாளுமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் தங்கவேலுடன் இருசக்கர வாகனத்தில் வீதிவீதியாக சென்று இரட்டை இலை சின்னத்தில் வாக்குகளை சேகரித்தார்.

# பாராளுமன்றத்தில் விஜய பிரபாகரன் குரல் ஒலிக்க வாய்ப்பு தாருங்கள்

## அருப்புக்கோட்டையில் பிரேமலதா விஜயகாந்த் பேச்சு



அருப்புக்கோட்டை.ஏப்.18.

விருதுநகர் பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் தேமுதிக வேட்பாளர் விஜய பிரபாகரனுக்கு ஆதரவாக தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பந்தல்குடி, கஞ்சநாயக்கன்பட்டி அருப்புக்கோட்டை சிவன் கோவில் பகுதிகளில் வாக்கு சேகரித்தார்.

அருப்புக்கோட்டையில் பிரேமலதா பேசியதாவது

உங்களுக்காக விஜய பிரபாகரன் குரல் டெல்லி பாராளுமன்றத்தில் ஒலிக்க ஒரு வாய்ப்பு தாருங்கள். வெற்றி பெற்றால் தொகுதிக்கு தேவையான அடிப்படை ரோடு வாருகால், சுகாதாரம் செய்து தரப்படும். விசைத்தறி நெசவாளர்களுக்கு மின் கட்டண உயர்வை குறைக்கப்படும். திருச்சுழி பகுதியில் மல்லிகைப்பூ விளைச்சல் அதிகமாக இருப்பதால் அங்கு ஒரு சென்ட் பேக்டரி அமைத்து தரப்படும். படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தரப்படும். வருடத்திற்கு 60 பெண்களுக்கு பத்தாயிரம் பணம் வழங்கப்படும் . அது ஐந்து ஆண்டுகளுக்கு சொந்த பணத்தில் 30 லட்சம் வழங்கப்படும்.மேலும் தொகுதியில் ஆறு சட்டமன்ற தொகுதியிலும் அலுவலகம் அமைக்கப்படும். ஆறு சட்டமன்றத் தொகுதியிலும் தையல், கம்ப்யூட்டர் பயிற்சி வகுப்பு நீட் தேர்வு மையம் இலவசமாக அமைத்து தரப்படும்.

அருப்புக்கோட்டை வழியாக சென்னைக்கு செல்லும் சிலம்பு எக்ஸ்பிரஸ் ரயிலை தினந்தோறும் இயக்க நடக்க எடுக்கப்படும். மதுரை அருப்புக்கோட்டை வழியாக தூத்துக்குடி செல்லும் புதிய ரயில் திட்டத்தை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த பந்தல்குடியில் விவசாயத்தை அழிக்கும் காட்டுப்பன்றிகளை ஒழிக்க அதை வனவிலங்குகள் பட்டியிலிருந்து நீக்க விஜய பிரபாகர்கள் பாராளுமன்றத்தில் குரல் கொடுப்பார். அதற்கான பாதுகாப்பை உங்களுக்கு நாங்கள் ஏற்படுத்துவோம் கட்டுமான தொழிலாளர்களுக்கு இலவசமாக இன்ஷூரன்ஸ் மற்றும் மருத்துவ காப்பீடு மற்றும் நடவடிக்கை எடுக்கப்படும். எனவே நீங்கள் அனைவரும் விஜய பிரபாகர் அவர்களுக்கே கேப்டன் கண்டெடுத்த வெற்றி சின்னமாம் முரசு சின்னத்திலே நான்காவது நம்பர் பட்டனை அழித்து முரசு சின்னத்திற்கு வாக்களியுங்கள் . என்று பேசினார். நிகழ்ச்சியில் அருப்புக்கோட்டை ஒன்றிய கழகச் செயலாளர்கள் யோக. வாசுதேவன், சங்கரலிங்கம், அருப்புக்கோட்டை நகர கழகச் செயலாளர் சக்திவேல் பாண்டியன், தேமுதிக மாவட்ட செயலாளர் செரிப் மற்றும் அண்ணா திமுக தேமுதிக கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



மதுரை பாராளுமன்ற தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் டாக்டர் சரவணனை ஆதரித்து தவுட்டுச்சந்தை, முத்து கருப்பன் பிள்ளை வீதி உள்ளிட்ட 85 - அது வார்டுக்குட்பட்ட பகுதிகளில் வீடு,வீடாகச் சென்று கவுன்சிலர் முத்துமாரி ஜெயக்குமார் வட்டச் செயலாளர் நாட்டாமை ஜெயக்குமார் ஆகியோர் அ.தி.மு.க. அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்து கூறி தீவிர பிரச்சாரம் செய்து இரட்டை இலைக்கு வாக்கு சேகரித்தனர்.



மதுரை பாராளுமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் டாக்டர் சரவணனை ஆதரித்து நரிமேடு, பீ.பீ.குளம் போன்ற பகுதிகளில் வடக்கு 2-ஆம் பகுதி செயலாளர் வி.கணேசன் தலைமையில் வீடு,வீடாக சென்று அதிமுக அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக்கூறி துண்டு பிரசுரங்களை வழங்கி இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இதில் முன்னாள் மண்டல தலைவர் கே.ஜெயவேல், அவைத்தலைவர் எஸ்.முருகன் மற்றும் வட்டச்செயலாளர்கள் கண்ணன், பால்பாண்டி, மகேந்திரன், உதயா, பாண்டித்துரை, சுரேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை பாராளுமன்ற தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் டாக்டர் சரவணனை ஆதரித்து ரிசர்வ்லைன் அருகே உள்ள காலாங்கரை பகுதியில் வடக்கு 2-ம் பகுதி சார்பில் 15 -வது கிழக்கு வட்ட அ.தி.மு.க. செயலாளர் புதூர் எம்.உதயாகுமார் வீடு,வீடாக சென்று அ.தி.மு.க.அரசின் சாதனைகளை வழங்கி இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் நகர் மற்றும் மோகனூர் கிழக்கு ஒன்றிய பகுதிகள் முழுவதும் அதிமுக வேட்பாளர் ராஹா சு.தமிழ்மணியுடன், முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி இறுதிக்கட்ட பிரச்சாரம் மேற்கொண்டார். முன்னாள் எம்எல்ஏ கே.பி.பி.பாஸ்கர், பொதுக்குழு உறுப்பினர் என்.மயில்சுதந்திரம், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சேகர், தேமுதிக மாவட்ட செயலாளர் ராமலிங்கம் உட்பட ஏராளமான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் நாடாளுமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் ராஹா சு.தமிழ்மணிக்கு ஆதரவாக முன்னாள் அமைச்சர் டாக்டர் வெ.சரோஜா ராசிபுரம் நகர பகுதிகளில் வீடு வீடாக சென்று துண்டு பிரசுரங்களை வழங்கி இரட்டை இலைக்கு வாக்கு சேகரித்தார். மாவட்ட அவைத்தலைவர் எஸ்.பி.கந்தசாமி, ராசிபுரம் நகர செயலாளர் எம்.பாலசுப்ரமணியன் உள்பட கழக நிர்வாகிகள் உடன் சென்றனர்.

# அதிமுக வேட்பாளருக்கு மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளர் எஸ் எம் மாதையன் வாக்கு சேகரிப்பு



**கிருஷ்ணகிரி,ஏப்.18-**

கிருஷ்ணகிரி நாடாளுமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் ஜெயபிரகாஷ்க்கு பர்கூர் சட்டமன்றத் தொகுதி நக்கல்பட்டி, கொல்லூர், மோடிக்குப்பம், செந்தாரப்பள்ளி, நாயக்கனூர், அஞ்சூர் , சின்னபமுட்லு பெரிய பமுட்லு, உள்ளிட்ட கிராமங்களில் , மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளர் எஸ்.எம். மாதையன், ஒன்றிய செயலாளர்.ஜெயபால் ஆகியோர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர் ஏராளமான பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

தொடர்ந்து அங்கு உள்ள வீதிகளில் உள்ள பொதுமக்களிடம் அதிமுக தேர்தல் வாக்குறுதிகளை எடுத்துரைத்து. நின்று போன ஆதிமுக திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்ற இரட்டை இலைக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டார். உடன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ராஜேந்திரன், ஒன்றிய அவைத்தலைவர் மாதப்பன், முன்னாள் கவுன்சிலரும் மாவட்ட பிரதிநிதி பரமசிவம், ரத்தினம், நஜிர், சரவணன், காஞ்சனா, ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் மாவட்டத்தில் நாள்தோறும் 3 லட்சம் நபர்களுக்கு தேர்தல் நாள் அச்சிடப்பட்ட ஆவின் பால் விற்பனை

## கலெக்டர் ச.உமா தகவல்



**நாமக்கல்,ஏப்.18-**

நாமக்கல் நகராட்சி, பூங்கா சாலை, ஆவின் பால் விற்பனை நிலையத்தில் (17.4.2024) மாவட்ட தேர்தல் அலுவலர் மருத்துவர் ச.உமா, , தேர்தல் நாள் அச்சிடப்பட்ட ஆவின் பால் விற்பனையை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

மக்களவைப் பொதுத் தேர்தல் 2024 –ல் 100 சதவீதம் வாக்குப்பதிவை உறுதி செய்திடும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. அதன்படி, நாமக்கல் மாவட்டத்தில் தேர்தல் நாளான ஏப்ரல் 19 (வெள்ளிக்கிழமை) அன்று வாக்களிக்க தகுதியுடைய அனைவரும் 100 சதவிகிதம் வாக்களிப்பதை உறுதி செய்யும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில், மாவட்ட தேர்தல் அலுவலர் / கலெக்டர் மருத்துவர் ச.உமா, நாள்தோறும் முதல் 3 இலட்சம் நபர்களுக்கு சென்றடையும் வகையில் ஆவின் நிறுவனத்தின் சார்பில் பால் பாக்கெட்டுகளில் தேர்தல் நாள் அச்சிடப்பட்டு சுமார் 1.50 லட்சம் குடும்பங்களை சென்றடையும் வகையில் விற்பனையை தொடங்கி வைத்தார். 487 கிராமங்களில் ஆவின் நிறுவனத்தின் சார்பில் பால் உற்பத்தியாளர்களை சென்றடையும் வகையில் அனைத்து பால் உற்பத்தியாளர் சங்கங்கள், ஆவின் விற்பனையகம், ஆவின் பாலகம் போன்ற இடங்களில் துண்டு பிரசுரங்களாகவும், ஒட்டு வில்லைகளாகவும் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1.50 இலட்சம் குடும்பங்கள் நகர்ப்புறங்களிலும், சுமார் 13,500 கிராமப்புற குடும்பங்களையும் சென்றடையும் வகையில் நாமக்கல் ஆவின் நிறுவனத்தின் சார்பில் விழிப்புணர்வு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு 17.4.2024, 18.4.2024 மற்றும் 19.4.2024 ஆகிய மூன்று நாட்களுக்கு நடைபெறும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த விழிப்புணர்வு பணிகளில் ஆவின் நிறுவனத்தின் சார்பில் சுமார் 500-க்கும் மேற்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) கு.செல்வராசு, ஆவின் பொது மேலாளர் மருத்துவர் ஆர். சண்முகம், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதியில் தேர்தல் முன்னேற்பாடு பணிகள்

## கலெக்டர் கி.சாந்தி தலைமையில் ஆய்வுக்கூட்டம்



**தருமபுரி,ஏப்.18-**

பாராளுமன்ற பொதுத் தேர்தல் -2024ஐ முன்னிட்டு, தருமபுரி பாராளுமன்ற தொகுதி, பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதியில் தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் கி.சாந்தி தலைமையில் (17.04.2024) ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

வாக்குச்சாவடிகளுக்கு வாக்காளர்களுக்கு குடிநீர் வசதி, சுகாதார வசதி மற்றும் மின்சார வசதி, சாய்வு தளம் மற்றும் சக்கர நாற்காலிகள் உள்ளிட்ட தேவையான அடிப்படை வசதிகளை வாக்குச்சாவடி மையங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது குறித்தும் மற்றும் பதற்றமான வாக்குச்சாவடி மையத்தில் (Web Streaming) இணையவழி கண்காணிப்பு கேமரா அமைக்கும் பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் ஆய்வு மேற்கொண்டு அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து பாராளுமன்ற பொதுத் தேர்தல் -2024ஐ முன்னிட்டு, பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் வாக்குசாவடி மையங்களுக்கு வாக்குப்பதிவிற்கு தேவையான அனைத்து பொருட்களும் தயார் நிலையில் உள்ளதை பார்வையிட்டார்.

மேலும், பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஜாலியூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வாக்குசாவடி மையம், நத்தமேடு அரசினர் மேல்நிலைப்பள்ளி வாக்குசாவடி மையம், மற்றும் மோட்டாங்குறிச்சி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வாக்குசாவடி மையம் ஆகிய பதற்றமான வாக்குசாவடி மையங்களில் (Web Streaming) இணையவழி கண்காணிப்பு கேமராக்கள் அமைக்கப்பட்டுள்ளதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வுகளின் போது, கூட்டுறவு சர்க்கரை ஆலை மேலாண்மை இயக்குநர் ஆர்.பிரியா, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் பி.ஷெரிலி ஏஞ்சலா, அரூர் துணை காவல் கண்காணிப்பாளர் ஜெகநாதன், பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் ஆர்.சரவணன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள், காவல் ஆய்வாளர்கள் மற்றும் தேர்தல் துணை வட்டாட்சியர்கள் கலந்து கொண்டனர்.

# ஓமலூர் அருகே காடையாம்பட்டியில் தீத் தொண்டு நாள் வார விழா



**ஓமலூர்,ஏப்.18-**

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே காடையாம்பட்டி தீயணைப்பு துறையினர் நிலைய அலுவலர் மு. ராஜசேகரன் தலைமையில் தீத் தொண்டு நாள் வார விழாவை முன்னிட்டு தீ பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் பருவ நிலை மாற்றத்தினால் ஏற்பட்டுள்ள வெப்ப அலை சம்பந்தமாகவும் காடையாம்பட்டி அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் வட்டார மருத்துவ அலுவலர் சாது பக்த சிங் முன்னிலையில் மருத்துவமனை செவிலியர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் பொதுமக்களுக்கு தீ பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரம், தீ பாதுகாப்பு போலி ஒத்திகை நிகழ்ச்சி மற்றும் வெப்ப அலைகளிலிருந்து மனிதர்கள் மற்றும் விலங்குகள் தங்களை தற்காத்துக்கொள்வது தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரமும் நடைபெற்றது.

# அதிமுக வேட்பாளருக்கு ஊராட்சி மன்ற தலைவர் சிவலிங்கம் தீவிர வாக்கு சேகரிப்பு



**கிருஷ்ணகிரி,ஏப்.18-**

கிருஷ்ணகிரி நாடாளுமன்ற அதிமுக வேட்பாளர் ஜெயபிரகாஷ்க்கு கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சர் பாலகிருஷ்ணன் ரெட்டி ஆலோசனைபடி காவேரிப்பட்டணம் அருகே அரசம்பட்டி ஊராட்சியில் முருங்கபட்டி, பஞ்சமோட்டூர்,ஏ.மோட்டூர் உள்ளிட்ட கிராமங்களில் அரசம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் பி.பி.சிவலிங்கம் தலைமையில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்

இதில் ஏராளமான பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து அங்குள்ள வீதிகளில் உள்ள பொதுமக்களிடம் அதிமுக தேர்தல் வாக்குறுதிகளை எடுத்துரைத்து. நின்று போன அதிமுக திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்ற இரட்டை இலைக்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டார். உடன் அரசம்பட்டி.கோட்டப்பட்டி ஒன்றிய கவுன்சிலர் மாதன், கோபால், கர்னல்,மாது,திருப்பதி,வடிவேலன், தேமுதிக நிர்வாகிகள் சரவணன், ராமச்சந்திரன் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தர்மபுரி ஸ்ரீ கிருஷ்ணா பாராமெடிக்கல் கல்லூரியில் விளக்கு ஏற்றி உறுதிமொழி ஏற்கும் விழா



**தர்மபுரி,ஏப்.18-**

தர்மபுரி மாவட்டத்தில் 17 ஆண்டுகளாக இயங்கி வரும் ஸ்ரீ கிருஷ்ணா பாராமெடிக்கல் கல்லூரியில் தங்களது பணியை செவ்வனே செய்வதற்கான 16 வது முறையாக உறுதிமொழி ஏற்க்கும் நிகழ்வு கல்லூரி ஆடிட்டோரியத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு கல்லூரி தாளாளர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினர் ஓய்வு பெற்ற நீதிபதி இராஜாராம் , சிறுவர் நீதிக்குழுமம் உறுப்பினர் சரவணன், தீயணைப்பு நிலையம். திரு வெங்கடேஷ் ஆகியோர் சிறப்புரைனர். அதைத் தொடர்ந்து சிறப்பு கௌரவ அழைப்பாளர்கள் மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாடு அலகு மேற்பார்வையாளர் உலகநாதன், கிராம சுகாதார செவிலியர் ராஜேஸ்வரி , ஆச்சி மசாலா மேலாளர் சிவா , அகர்வால் கண் மருத்துவமணை மக்கள் தொடர்பு அலுவலர் செந்தில், வனவிலங்கு ஆராய்ச்சி நிபுணர் மற்றும் சமூக ஆர்வலர் ராம்குமார் அனைவரும் ஒன்றிணைந்து இந்த நிகழ்ச்சியை கௌரவித்தனர். அதைத் தொடர்ந்து டிப்ளமோ இன் பிராக்டிகல் நர்சிங், டிப்ளமோ இன் மெடிக்கல் லெபாரட்டரி டெக்னாலஜி, டிப்ளமோ இன் ஆபரேஷன் தியேட்டர் டெக்னாலஜி, டிப்ளமோ இன் டயாலிசிஸ் டெக்னீசியன், டிப்ளமோ இன் எக்ஸ்ரே டெக்னீசியன் மற்றும் டிப்ளமோ இன் அனசிசியா டெக்னிசியன், இது போன்ற பத்துக்கும் மேற்பட்ட மருத்துவ சார்ந்த பாடப்பிரிவுகளில் இருந்து சுமார் 180-க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் இந்த குத்து விளக்கு ஏற்றும் நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்த விளக்கு ஏற்றும் விழாவின் நோக்கம் தங்களது செவிலியர் தொழிலை புனிதமாகவும், தூய்மையாகவும், அர்ப்பணிப்புடனும் பணியாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த விளக்கேற்றும் உறுதிமொழி நிகழ்வை மருத்துவர் .நீலா அம்மையார் வருகை புரிந்து மாணவ மாணவிகளுக்கு படிப்பு முடிந்த பிறகு மருத்துவமணையில் எப்படியெல்லாம் பணியாற்ற வேண்டும், இந்த துறையை எப்படி எல்லாம் கையாள வேண்டும். இந்த துறையுடைய சிறப்பு அம்சங்களை பற்றி எடுத்துரைத்தனர். பிறகு இவர் கற்றுக்கொண்ட விஷயங்களை மாணவ மாணவிகளுக்கு தங்களது மெழுகுவர்த்தி மூலம் தீப ஒளி ஏற்றி மாணவ மாணவிகள் தங்களது வாழ்க்கையில் தீப ஒளி விழாவுக்காகவும் செயல்பட வேண்டும் என்று மாணவ மாணவிகளை வாழ்த்துக்கள் கூறி உறுதிமொழி ஏற்கப்பட்டது. இந்த விழாவின் ஏற்பாடுகளாக கல்லூரி பேராசிரியர்கள் மகேஸ்வரி, ரஞ்சிதா, குமுதா, செல்வி கல்லூரி முனைவர் பொன்னம்பலம். கல்லூரியின் துணை பேராசிரியர்கள் கவினா ,சந்தியா. லைப்ரரி இன்சார்ஜ் கோபிகா ,லேப் இன்சார்ஜ் அனிதா, அலுவலக உதவியாளர்கள் சுபாஷினி, தீபா, மணிகண்டன் .மக்கள் தொடர்பு அலுவலர் அருண்ராஜேஷ் அனைவரும் ஒன்றிணைந்து இந்த நிகழ்வை சிறப்பாக வழிநடத்தினர். இறுதி ஆண்டு மாணவ மாணவிகள் ஊடகம் மற்றும் பத்திரிக்கை துறை நண்பர்களிடம் தங்களது பணியை செவ்வனே செய்வதற்கான உறுதிமொழி ஏற்றுக்கொண்டு நாங்கள் படிப்பு முடிந்த பிறகு மருத்துவமனையில் செல்லும் பொழுது இப்போது எப்படி எல்லாம் உறுதிமொழி ஏற்றுக் கொண்டோமோ அதே போல் நாங்கள் இனி வரும் காலங்களில் மருத்துவமனை பணியில் பணியாற்றும்போது உணர்வோடும், உண்மையோடும், நேசத்தோடும் மற்றும் பாசத்தோடும் பாரபட்சம் இல்லாமல் பணியாற்றுவேன் என்று செய்தித் துறையிடம் மாணவ மாணவிகளை தெரிவித்தனர். விழாவின் நன்றியுறையாக கல்லூரி நிர்வாக அலுவலர் ஜோதி பாசு அனைவருக்கும் நன்றி கூறினார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்து வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம்

## தேர்தல் பொதுப் பார்வையாளர் முன்னிலையில் நடைபெற்றது



**சேலம்,ஏப்.18-**

வாக்குப்பதிவிற்கு 48 மணி நேரத்திற்கு முன்னதாக பின்பற்றப்பட வேண்டிய தேர்தல் நடத்தை விதிமுறைகள் குறித்து வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் தேர்தல் பொதுப் பார்வையாளர் ஜி.பி. பாட்டீல், முன்னிலையில், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, தலைமையில் (17.04.2024) சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் தெரிவித்ததாவது:

மக்களவைப் பொதுத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு 19.04.2024 அன்று நடைபெறவுள்ளதையொட்டி, தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க அனைத்து வேட்பாளர்களும் 48 மணி நேரத்திற்கு முன்னதாக தேர்தல் பிரச்சாரங்கள் செய்வதை நிறுத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அந்தவகையில், 17.04.2024 மாலை 6 மணிக்குள் தேர்தல் பிரச்சாரங்களை நிறுத்திட ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது. வெளியூரிலிருந்து பிரச்சாரத்திற்காக வந்த நபர்கள் தொடர்ந்து அம்மக்களவைத் தொகுதியில் இருக்க அனுமதியில்லை.

குறிப்பாக, தேர்தல் நாளன்று வேட்பாளர்கள், முகவர்கள் மற்றும் அவரது பணியாளர்களுக்கு தலா ஒரு வாகனத்திற்கு மட்டுமே அனுமதி உண்டு. அதே போன்று, வேட்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனத்தில் வேறு நபர்கள் பயணிக்க அனுமதி இல்லை. பிற வாகனங்களில் ஓட்டுநர் உட்பட 5 பேருக்கு மட்டுமே வாகனத்தில் செல்ல அனுமதி உண்டு. மேலும், தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வாகனத்திற்காக பெற்ற அனுமதி கடிதத்தினை வாகனத்தில் தெளிவாகத் தெரியும்படி ஒட்டப்பட வேண்டும். மேற்கண்டுள்ள அனுமதி பெறப்பட்ட வாகனங்களில் வாக்காளர்களை ஏற்றிச் செல்லக் கூடாது.

வேட்பாளரோ அல்லது முகவரோ வாக்காளரை வாக்களித்திட வாக்காளரின் இருப்பிடத்திலிருந்து வாக்குச்சாவடிக்கோ, வாக்குச்சாவடியிலிருந்து இருப்பிடத்திற்கோ அழைத்துச் செல்ல வாகன வசதி ஏற்படுத்தித் தரக்கூடாது. ஒரு வேட்பாளருக்கு ஒரு முகவர் மட்டுமே வாக்குச்சாவடியில் அனுமதிக்கப்படுவர். தேர்தல் நாளன்று பிற்பகல் 3 மணிக்கு முகவர்களை மாற்றம் செய்திடவும் அனுமதியில்லை உள்ளிட்ட தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் அனைத்தையும் முழுமையாக வேட்பாளர்கள், கட்சிப் பிரதிநிதிகள் பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, வாக்குக்கு பணம்/ பொருட்கள் கொடுப்பதும், வாக்குக்கு பணம்/ பொருட்கள் வாங்குவதும் சட்டப்படி தண்டனைக்குரியது என அரசியல் கட்சியினருக்கும், பொதுமக்களுக்கும் தொடர்ச்சியாக விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தேர்தல் நடத்தை விதி மீறல்கள் குறித்த புகார்களைத் தெரிவிக்க ஏதுவாக மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் தேர்தல் கட்டுப்பாட்டு அறைக்கு புகார்களை 1800-425-7020 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலும், 0427-2450031, 0427-2450032, 0427-2450034, 0427-2450035 மற்றும் 0427-2450046 ஆகிய தொலைபேசி எண்களிலும் மற்றும் 94899 39699 என்ற எண்ணுக்கு Whatsapp செயலி மூலமும் தெரிவிக்கலாம்.

மேலும், பொதுமக்கள் c-Vigil என்ற செயலியின் மூலமும் புகார்கள் தெரிவிக்கலாம். அவ்வாறு, தெரிவிக்கப்படும் புகார்கள் மீது உடனடி நடவடிக்கை எடுத்து தீர்வு காண இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் மக்களவைப் பொதுத் தேர்தலை அமைதியான முறையில் நடத்திட அனைத்துத் தரப்பினரும் உரிய ஒத்துழைப்பை வழங்கிட வேண்டும். இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் டாக்டர். இரா.பிருந்தாதேவி, தெரிவித்தார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ.மேனகா, உதவி கலெக்டர் (பயிற்சி) செல்வி தி.சுவாதி ஸ்ரீ, மாவட்ட ஆட்சியரின் உதவியாளர் (தேர்தல்கள்) ஏ.சிவசுப்பிரமணியன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், வேட்பாளர்கள் மற்றும் கட்சிப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள நுண் பார்வையாளர்களுக்கு கணினி முறையிலான பணி ஒதுக்கீடு

**சேலம்,ஏப்.18-**

சேலம் மாவட்டத்தில் வாக்குப்பதிவு நாளன்று தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள நுண் பார்வையாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு கணினி முறையிலான பணி ஒதுக்கீடு தேர்தல் பொதுப் பார்வையாளர் ஜி.பி. பாட்டீல், முன்னிலையில், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தலைமையில் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. மக்களவைப் பொதுத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு 19.04.2024 வெள்ளிக்கிழமையன்று நடைபெறவுள்ளது. தேர்தல் வாக்குப்பதிவு நாளன்று சேலம் மாவட்டத்திலுள்ள 11 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 250 பதற்றமான மற்றும் மிகவும் பதற்றமான வாக்குச்சாவடிகளில் பணியாற்றவுள்ள நுண் பார்வையாளர்கள் மற்றும் சேலம் மாவட்டத்திலுள்ள 3,260 வாக்குச்சாவடி மையங்களில் பணியாற்றவுள்ள வாக்குச்சாவடி தலைமை அலுவலர் என மொத்தம் 16,092 அலுவலர்களுக்கு கணினி முறையிலான பணி ஒதுக்கீடு தேர்தல் பொதுப் பார்வையாளர் ஜி.பி.பாட்டீல், முன்னிலையில், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தலைமையில் இன்றையதினம் நடைபெற்றது. இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு. பெ.மேனகா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) எம்.ஜெகநாதன், மாவட்ட ஆட்சியரின் உதவியாளர் (தேர்தல்கள்) ஏ.சிவசுப்பிரமணியன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

**அசல் சொத்து ஆவணம் காணவில்லை**

கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டம், வெங்கடசமுத்திரம், சிகரலப்பள்ளி கிராமத்தில் வசித்து வரும் பாபு கோவிந்தசெட்டி அவர்களின் குமாரர் முருகன் ஆகிய நான் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக்கொள்வது என்னவென்றால் என்னுடைய தகப்பனார் பெயரில் கிருஷ்ணகிரி சார்பதிவகத்தில் பதிவான கிரய ஆவண எண்:499/1980-என்ற ஆவணத்தை கடந்த 13.04.2024-ம் தேதி எனது ஆவண நிலத்தினை விற்பது தொடர்பாக விசாரிக்க செல்லும்போது செல்லம்பட்டி கூட்ரோட்டில் பேருந்து நிறுத்தத்தின் அருகில் உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுத்துவிட்டு வந்து பார்க்கும்பொழுது மேற்கண்ட அசல் ஆவணத்தை காணவில்லை. இது தொடர்பாக காவல்துறை இணையதளத்தில் புகார் எண்: CRM24169333-ல் புகார் பதிவு செய்துள்ளேன். யாரேனும் மேற்கண்ட அசல் ஆவணத்தை கண்டுபிடித்தால் மேற்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அசல் சொத்து ஆவணம் காணவில்லை**

கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டம், தொகரப்பள்ளி அஞ்சல், ஆடலம் கிராமத்தில் வசித்து வரும் நரசிம்மன் அவர்களின் குமாரர் கோவிந்தராஜ் ஆகிய நான் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக்கொள்வது என்னவென்றால் என்னுடைய தந்தையார் பெயரில் பர்கூர் சார்பதிவகத்தில் பதிவான கிரய ஆவண எண்:309/2011-என்ற ஆவணத்தை கடந்த 14.04.2024-ம் தேதி எனது ஆவண நிலத்தினை விற்பது தொர்பாக விசாரிக்க செல்லும்போது நாகரசம்பட்டி பேருந்து நிறுத்தத்தின் அருகில் உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுத்துவிட்டு வந்து பார்க்கும்பொழுது மேற்கண்ட அசல் ஆவணத்தை காணவில்லை. இது தொடர்பாக காவல்துறை இணையதளத்தில் புகார் எண்:CRG24169355-ல் புகார் பதிவு செய்துள்ளேன். யாரேனும் மேற்கண்ட அசல் ஆவணத்தை கண்டுபிடித்தால் மேற்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

# ஈரோடு நாடாளுமன்ற தொகுதியில் மக்களின் அடிப்படை பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பேன்: அதிமுக வேட்பாளர் உறுதி



ஈரோடு, ஏப். 18:

ஈரோடு நாடாளுமன்ற தேர்தலில் அதிமுக வேட்பாளராக ஆற்றல் அசோக்குமார் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுகிறார். இதையொட்டி, ஈரோடு நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி, குமாரபாளையம், தாராபுரம், காங்கயம் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளிலும் வேட்பாளர் ஆற்றல் அசோக்குமார் மக்களை சந்தித்து தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வந்தார்.

இந்நிலையில், இறுதி பிரசார நாளான நேற்று காலை ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் பிரசாரம் மேற்கொண்டார். தொடர்ந்து நேற்று மாலை ஈரோடு ரயில்வே ஸ்டேஷன், சவீன் சாலை, ஈரோடு பஸ் ஸ்டாண்ட், சத்தி சாலை, ஈரோடு மார்க்கெட், பன்னீர்செல்வம் பூங்கா சந்திப்பில் திறந்த வாகனத்தில் நின்றபடி மக்களை சந்தித்து பிரசாரம் மேற்கொண்டார். அப்போது, வேட்பாளர் ஆற்றல் அசோக்குமார் மக்களிடத்தில் பேசியதாவது:

ஈரோடு நாடாளுமன்ற தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஈரோடு ரயில்வே ஸ்டேஷன் விரிவுபடுத்தப்படும். ஈரோடு-பழனிக்கு புதிய ரயில் சேவை துவங்க மத்திய அரசை வலியுறுத்துவோம்.

ஈரோடு கலெக்டர் அலுவலகம் முதல் திண்டல் வரை புதிய மேம்பாலம் அமைக்கப்படும். அதேபோல், ஈரோடு மாநகராட்சியின் எல்லைகள் விரிவுப்படுத்தப்படும். புதிதாக விரிவுப்படுத்தப்படும் பகுதிகளில் மாநகராட்சியின் ஊராட்சிக்கோட்டை கூட்டு குடிநீர் திட்டம், பாதாள சாக்கடை திட்டம் போன்ற பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்தப்படுத்தப்பட்டு, அப்பகுதிகளில் அடிப்படை கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும். ஈரோடு அரசு மருத்துவமனையில் அனைத்து மருத்துவ சிகிச்சைகளும் கிடைக்கும் வகையில் நவீன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படும்.

குறிப்பாக ஈரோடு அரசு மருத்துவமனையில் எம் ஆர்ஐ ஸ்கேன் வசதி செய்து தரப்படும். ஈரோட்டில் சாயக் கழிவுகளை அகற்றுவதற்கு காலிங்கராயன் வாய்க்காலையொட்டி தனி வாய்க்கால் அமைத்து கடல் வரை அந்த கழிவினை கடல் வரை கொண்டு செல்லும் திட்டத்தை நடைமுறைப்படுத்த வலியுறுத்துவோம். இதுதவிர சாயக்கழிவு சுத்திகரிக்க ஒருங்கிணைந்த பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும். மக்கள் கிழங்குகளின் தன்மையை பாதுகாக்க குளிரூட்டப்பட்ட அறை அமைக்கப்படும். விசைத்தறி தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்க புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும். நூல் விலை உயர்வை கட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுப்போம்.

அனைத்து பகுதிகளிலும் தெரு மின் விளக்குகள், முக்கிய சந்திப்புகளில் உயர் கோபுர மின் விளக்குகள் அமைக்கப்படும். மக்களுக்கு சுகாதாரமான குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும். சாலை பாதுகாப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். வாகன நெரிசலை குறைக்க அனைத்து தொகுதிகளிலும் மேம்பாலங்கள் அமைக்கப்படும். விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தி மக்களின் வாழ்வாதாரம் காக்க நடவடிக்கை எடுப்பேன். எனவே, எனக்கு இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும். இவ்வாறு வேட்பாளர் ஆற்றல் அசோக்குமார் பேசினார்.

இந்த பிரசாரத்தின் போது, மாநகர் மாவட்ட செயலாளர் ராமலிங்கம், முன்னாள் எம் எல்ஏ.க்கள் தென்னரசு, சிவசுப்பிரமணி, முன்னாள் துணை மேயர் பழனிசாமி, ஜெயலலிதா பேரவை மாநில துணை செயலாளர் வீரக்குமார், பகுதி செயலாளர் மனோகரன், பகுதி அவை தலைவர் மீன் ராஜா என்ற ராஜசேகர் உட்பட பலர் கலந்து கொண்டன



**நீலகிரி பாராளுமன்ற தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் லோகேஷ் தமிழ் செல்வன் நேற்று ஊட்டி நகராட்சி மார்க்கெட்டில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் மாவட்ட செயலாளர் கப்பச்சி வினோத், நகர செயலாளர் சண்முகம் உட்பட பலர் உள்ளனர்.**

# குடிமை பணி தேர்வில் அகில இந்திய அளவில் 513ம் இடம் பிடித்து சிகரம் ஐ.ஏ.எஸ். இலவச பயிற்சி மையத்தில் பயின்ற மாணவி சாதனை



ஈரோடு ஏப்18

நடிகர் சிவக்குமார் தலைவராகவும் , பரணி பில்டர்ஸ் பாலசுப்பிரமணி செயலாளராகவும் , பொருளாளர்களாக சக்தி மசாலா குழும தலைவர்கள் டாக்டர்.துரைசாமி மற்றும் டாக்டர்.சாந்தி துரைசாமி , மூவரின் தலைமையில் இயங்கிவரும் சிகரம் ஐ ஏ எஸ்இலவச பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற கோவையை சேர்ந்த மாணவி சத்தியானந்தி குடிமை பணி (UPSC- IAS, IPS ...) தேர்வில் அகில இந்திய அளவில் 513ஆம் இடம் பிடித்து சாதனை புரிந்துள்ளார். அம்மாணவிக்கு அறக்கட்டளை நிர்வாகிகள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டனர்.2024-2025ஆம் வருடதிற்கான இலவச பயிற்சிகாண நுழைவு தேர்வு விண்ணப்பம் ஆன்லைனில் தொடங்கியது, நுழைவு தேர்வு நாள் ஜூன் 2, விண்ணப்பிக்க கடைசி தேதி மே 27. நுழைவு தேர்வில் வெற்றி பெரும் மாணவர்களுக்கு சென்னையில் நேர்முக தேர்வு நடத்தப்பட்டு ,அதில் தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் ஷங்கர் ஐ ஏஎஸ்அகாடமியில் வழங்கப்படும். குடும்பதினரின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் உணவு மற்றும் தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும். மேலும் தகவல்களுக்கு www.sigaramias.com. செல்: 9342321192.

# கொங்கு மண்டலத்தை திமுக கைப்பற்றும்: ஈரோட்டில் அமைச்சர் முத்துசாமி பேட்டி

ஈரோடு,ஏப்.18-

நாடளுமன்ற தேர்தல் அறிவிப்பு வந்தது முதல் ஈரோட்டில் திமுக வேட்பாளர் பிரகாஷ் அறிவித்தது முதல் திமுக கூட்டணி கட்சி நிர்வாகிகள் தீவிரமாக அரசியல் பணி செய்து வருகிறார்கள் கலைஞர் பெயரில் மகளிர் உரிமைத் தொகை திட்டம் இந்தியாவில் மட்டும் இல்லை வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் செயல்படுத்தப்பட்டு உள்ளது 1கோடி 17லட்சம் பெண்கள் தவிர தகுதியுள்ள அனைத்து மகளிர்க்கு உரிமைத் தொகை வழங்க நடவடிக்கை கட்டணமில்லா பேருந்து சேவை வேறு எங்கும் இல்லாத வகையில் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது

காலை உணவு திட்டம் மிகப்பெரிய அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது மற்ற மாநிலங்களில் இந்த திட்டம் செயல்படுத்த அரசு முன் வந்துள்ளது அரசு பள்ளிகளில் பெரும்பகுதியானவர்கள் உயர்கல்வி படிக்கும் வகையில் கல்லூரி படிப்பை தொடர புதுமைப் பெண் மற்றும் புதுமைப்பித்தன் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது மாணவர்கள் உயர்கல்வி சேர்க்கை அதிகரித்து உள்ளது நம்மை காக்கும் திட்டம் , இல்லம் தேடி மருத்துவம் இல்லம் தேடி கல்வி மக்களுடன் முதல்வர் திட்டம் ஆகியவை மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

சோலாரில் 60கோடி ரூபாய் மதிப்பீட்டில் புறநகர் பேருந்து நிலையம் கனிராவுத்தர் குளம் பகுதியில் 13ஏக்கரில் புறநகர் பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை சோலார் பேருந்து நிலையம் அருகில் 20கோடி ரூபாய் மதிப்பீட்டில் காய்கறிகள் சந்தை., சோலாரில் விளையாட்டு அரங்கம் போன்ற நடவடிக்கைகள் அரசின் சார்பில் எடுக்கப்பட்டுள்ளது 40கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிப்காட் பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் சுத்திகரிப்பு மையம் அமைக்க நடவடிக்கை அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.,

மஞ்சள் ஆராய்ச்சி மையம் சென்னிமலை கூட்டு குடிநீர் திட்டம்,பொல்லான் அரசு விழாவாக முன்னெடுத்து மணிமண்டபம் கட்டுதல் வஉசி பூங்கா சீரமைப்பு,மாநகராட்சி பகுதியில் கழிவு நீர் சுத்திகரிப்பு மையம்,போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது திமுக 40தொகுதிகளில் வெற்றி பெற்று இந்த பணிகளை நாடளுமன்ற உறுப்பினர்கள் பின்தொடர்ந்து செய்ய வசதியாக இருக்கும், பெருந்துறையில் புற்றுநோய் சிகிச்சை மையம் அமைக்க நடவடிக்கை

ஒன்றிய அரசு சரியாக ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என திமுக புகார் தெரிவிக்கும் போது அரசியல் காரணங்களுக்காக சொல்வதாக சிலர் நினைக்கிறார்கள் ஆனால் சென்னையில் மழைநீர் வடிகால் பிரச்சனை தீர்க்கப்பட நிலையில் வரலாறு காணாத மழை காரணமாக வெள்ள பாதிப்பு ஏற்பட்டது இதற்கு மத்திய அரசு நிதியுதவி வழங்கவில்லை அதற்கு தான் திமுக அரசு புகார் சொல்கிறது தமிழகத்தில் இருந்து ஒன்றிய அரசுக்கு செல்லும் வரிக்கான தொகை தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்வதில்லை 49திமுக வாக்குறுதியை தவிர மற்ற அனைத்து திமுக தேர்தல் அறிக்கை திமுக தலைவர் நிறைவேற்றி உள்ளார்

ராகுல்காந்தி ஸ்டாலினுக்கு உள மாறாக ஸ்வீட் வாங்கி கொடுத்தார் அது நாடகம் இல்லை அந்த அளவுக்கு இந்திய கூட்டணி வலுவாக உள்ளதற்கு எடுத்துக் காட்டாக உள்ளது

பெட்ரோல் டீசல் விலை குறைப்பு, சுங்கச்சாவடி அகற்றம் நீட் தேர்வு விவகாரத்தில் மாணவர்கள் எடுக்கும் முடிவை தமிழகத்தில் செயல்படுத்தப்படும் என பரப்புரை போது ராகுல் காந்தி தெரிவித்து சென்றுள்ளார் தமிழகத்தினை மையமாக வைத்து இந்திய கூட்டணி தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது

அதிமுக பாஜக கைகோர்த்து சென்று கொண்டு இருக்கும் நிலையில் திமுக 38எம்பிக்கள் நடவடிக்கை எடுத்து கொண்டு தான் இருந்தார்கள்.,

கர்நாடக மாநில காங்கிரஸ் அந்த மாநிலத்தின் நலன் கருதி தான் பேசுகிறார்கள் அதனால் இதோடு ஒப்பிட்டு பேச வேண்டாம் அத்திக்கடவு அவிநாசி திட்டம் 100சதவீதம் முடிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது., தண்ணீர் வரத்து இருந்தவுடன் திட்டத்தை முதல்வர் செயல்பட்டுக்கு தொடங்கி வைப்பார்

கொங்கு பகுதியில் திமுக கண்டிப்பாக வெற்றி பெறும் தமிழகத்தில் எங்காவது மதுக்கடைக் சட்டவிரோதமாக செயல்படுவது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்

அமைச்சரும் வேட்பாளரும் ஒன்றாக சேர்ந்து தான் பிரச்சாரம் செய்து வருகிறார்., திமுக நிர்வாகிகள் பணம் பட்டுவாடா செய்வது போன்ற சம்பவம் எங்கேயும் இல்லை அப்படி இருந்தால் அப்படி நிகழ்ந்து இருந்தால் அரசியல் நோக்கத்தோடு நிகழ்ந்து இருக்கும் எனவும் தேர்தல் அலுவலர்கள் விசாரணையில் தான் தெரியும். இந்தியாவின் பணக்கார வேட்பாளர்களாக அதிமுக இருப்பது எங்களுக்கு கூடுதல் பலம் தான் மக்கள் பணக்காரர்களுக்கு வாக்களிப்பார்கள்



**ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா அருகில் இருந்து திமுக ஈரோடு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திருவாசகம் தலைமையில் வேட்பாளர் கே இ பிரகாசுக்கு ஆதரவாக வாக்கு சேகரித்தார்கள். இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்ட துணை செயலாளர் செந்தில்குமார், ஈரோடு மாநகர மாவட்ட செயலாளர் சுப்ரமணியம், மேயர் சு.நாகரத்தினம், திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலரும் கலந்து கொண்டனர்**



**பெருந்துறை ஈங்கூர் இந்துஸ்தான் அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி மாணவர்களால் 100 சதவீத வாக்களிப்பின் முக்கியத்தவத்தை விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ஈங்கூர் பேருந்து நிறுத்தம் அருகில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. இதில் கல்லூரிப் பேராசிரியர்கள், மாணவர்கள்மற்றும்பொதுமக்கள்கலந்துகொண்டு100சதவீதவாக்களிப்பைஉறுதிசெய்வேன் என்பதை உணர்த்தும் விதமாக வண்ணங்களால் தங்கள் கை அச்சினைப் பதிவுசெய்தனர்.**



**நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரம் நேற்றுடன் நிறைவு பெற்றதையொட்டி ஈரோடு அரசு மருத்துவமனை அருகே தமாகா சார்பில் போட்டியிடும் வேட்பாளர் விஜயகுமார் பிரச்சாரத்தை நிறைவு செய்தார் அருகில் தமாகாமாநில பொதுச் செயலாளர் விடியல் சேகர் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சரஸ்வதி ஆகியோர் உள்ளனர்**



**சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிறந்த நாளை முன்னிட்டு, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் ஓடாநிலையில் தீரன் சின்னமலை மணிமண்டபத்தில் அமைந்துள்ள திருவுருவச்சிலைக்கு கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சதீஷ்குமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ.சுகுமார் ஆகியோர் உள்ளனர்.**

# மக்களை கவரும் வகையில் திமுக இளைஞர் அணியினர் நூதன பிரசாரம்



ஈரோடு, ஏப். 18-

ஈரோடு மாநகர மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் மக்களை கவரும் வகையில் ஈரோட்டில் நூதன பிரசாரம் நடந்தது .அதாவது லாரியில் பெட்ரோல் பங்க், சமையல் கேஸ் மற்றும் பல்வேறு பொருட்கள் வைக்கப்பட்டு இந்தியா கூட்டணி வெற்றி பெற்றால் தேர்தல் வாக்குறுதிப்படி கேஸ் ,பெட்ரோல் விலை குறைக்கப்படும் போன்ற வாசகங்கள் வைக்கப்பட்டிருந்தன. மேலும் திமுக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் பற்றியும் எழுதி வைக்கப்பட்டிருந்தது. இந்த பிரசாரம் ஈரோடு பன்னீர்செல்வம் பார்க் அருகே இருந்து புறப்பட்டு ஈஸ்வரன் கோவில் வீதி ,பிருந்தா வீதி, மணிகூண்டு, மற்றும் ஜவுளி மார்க்கெட் பகுதிகளில் திமுக வேட்பாளர் பிரகாசுக்கு ஆதரவாக உதய சூரியன் சின்னத்திற்கு ஆதரவாக ஓட்டு கேட்டனர் .இளைஞர் அணி அமைப்பாளர் திருவாசகம் தலைமையில் நடந்த இந்த பிரசாரத்தில் மண்டல பொறுப்பாளர் சீனிவாசன் ,தி மு க மாவட்ட துணை அமைப்பாளர் செந்தில்குமார், மேயர் நாகரத்தினம் ,ஈரோடு மாநகர செயலாளர் சுப்பிரமணியம் மற்றும் ஏராளமான இளைஞர் அணியினர் பலர் கலந்து கொண்டனர்.


# ஈரோட்டில் இறுதி கட்ட ஓட்டு வேட்டையில் வேட்பாளர்கள்: விடுதிகளில் அதிகாரிகள் தீவிர கண்காணிப்பு

ஈரோடு, ஏப். 18-

தமிழகத்தில் ஒரு கட்டமாக பாராளுமன்ற தேர்தல் வரும் 19ஆம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலுக்கு இன்னும் 2 நாட்களே உள்ளது. ஈரோடு பாராளுமன்ற தேர்தலில் திமுக சார்பில் கே இ பிரகாஷ்,, அதிமுக சார்பில் ஆற்றல் அசோக்குமார், த.மா.கா சார்பில் விஜயகுமார், நாம் தமிழர் கட்சி சார்பில் கார்மேகன் மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் என மொத்தம் 31 பேர் களத்தில் உள்ளனர். 31 பேர் களத்தில் இருந்தாலும் திமுக, அதிமுக, த.மா.கா , நாம் தமிழர் கட்சி என நான்கு முனை போட்டு ஏற்பட்டுள்ளது.கடந்த சில நாட்களாக அரசியல் கட்சியினர் மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் ஈரோடு பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகளில் வீதி வீதியாக நடந்து சென்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள். முக்கிய அரசியல் கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக அமைச்சர்கள், எம்எல்ஏக்கள், சினிமா நட்சத்திர பேச்சாளர்கள் என பலர் போட்டி போட்டு பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்கள். காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை பிரசாரம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதனால் அரசியல் கட்சியினர் மற்றும் சுயேட்சைகள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள். பிரசாரம் செய்ய இன்று மாலை 6 மணி வரை மட்டுமே அவகாசம் உள்ளது. இதனால் ஈரோடு பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் முக்கிய வேட்பாளர்கள் இறுதி கட்ட பிரசாரத்தில் தீவிர ஓட்டு வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு ஆதரவாக பல வெளி மாவட்டங்களில் இருந்தும் நிர்வாகிகள் வந்து வாக்கு சேகரித்து வருகின்றனர். இன்று மாலையுடன் பிரசாரம் நிறைவு பெற உள்ளதால் வெளி மாவட்ட நிர்வாகிகள் மாலை 6 மணிக்கு பிறகு தொகுதியில் இருக்க அனுமதி இல்லை. ஈரோட்டில் விடுதிகளில் தங்கி இருக்கும் வெளி மாவட்ட நிர்வாகிகள் பெயர் பட்டியல் சேகரிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் இன்று மாலை 6 மணிக்கு பிறகு தொகுதியை விட்டு வெளியேற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்காக மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஜவகர் உத்தரின் பெயரில் விடுதிகள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதைப்போல் இன்று மாலைக்கு பிறகு சமூக வலைத்தளங்களிலும் பிரசாரத்தில் ஈடுபடக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே சமூக வலைத்தள நடவடிக்கையும் குற்றப்பிரிவு, சைபர் கிரைம் போலீசார் கண்காணித்து வருகின்றனர்.

# வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு கணினி மூலம் மூன்றாம் கட்ட சீரற்ற மயமாக்கல் பணிகள்

## தேர்தல் பொது பார்வையாளர் மஞ்சித்சிங் பரார் தலைமையில் நடந்தது



ஊட்டி, ஏப்.18-

நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், பாராளுமன்ற பொதுத்தேர்தல் 2024ஐ முன்னிட்டு, வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு கணினி மூலம் மூன்றாம்; கட்ட சீரற்ற மயமாக்கல் பணிகள் தேர்தல் பொது பார்வையாளர் மஞ்சித்சிங் பரார் தலைமையில், மாவட்ட தேர்தல் அலுவலர் ஃ மாவட்ட கலெக்டர் மு.அருணா முன்னிலையில் நடைபெற்றது.

இன்று(நேற்று) நடைபெற்ற மூன்றாம் கட்ட சீரற்ற மயமாக்கல் பணிகளின் மூலம் உதகை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 239 வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் கூடுதலாக 20 சதவீதம் என 1,174 வாக்குச்சாவடி அலுவலர்களும், கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 224 வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் கூடுதலாக 20 சதவீதம் என 1,108 வாக்குச்சாவடி அலுவலர்களும், குன்னூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 226 வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் கூடுதலாக 20 சதவீதம் என 1,109 வாக்குச்சாவடி அலுவலர்கள் என மொத்தம் நீலகிரி மாவட்டத்திலுள்ள 3 சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட 689 வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் கூடுதலாக 20 சதவீதம் என மொத்தம் 3,391 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு வாக்குச்சாவடி மையத்திலும், உதகை சட்டமன்றத் தொகுதிக்கு 23 நுண் பார்வையாளர்களுக்கும், கூடலூர் சட்டமன்றத் தொகுதிக்கு 67 நுண் பார்வையாளர்களுக்கும், குன்னூர் சட்டமன்றத் தொகுதிக்கு 37 நுண் பார்வையாளர்கள் என மொத்தம் 127 நுண்பார்வையாளர்கள் தேர்தல் பணியில் ஈடுபடுவதற்காக சீரற்ற மயமாக்கல் பணிகளும் நடைபெற்றது.

முன்னதாக நீலகிரி மாவட்டத்திற்குட்பட்ட 3 சட்டமன்ற தொகுதிகளில் பயன்படுத்தப்படும் 461 வாக்குச்சாவடி மையங்களில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்களின் செயல்பாடுகளை மாவட்ட கலெக்டர் தனது அலுவலகத்தில் செயல்பட்டு வரும் தேர்தல் கட்டுப்பாட்டு அறையிலிருந்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், உதவி தேர்தல் அலுவலர்கள் வருவாய் கோட்டாட்சியர்கள் மகராஜ் (உதகை), சதீஸ் (குன்னூர்), செந்தில்குமார் (கூடலூர்), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) சுரேஷ் கண்ணன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சசிகுமார் சக்கரபாணி, தேர்தல் வட்டாட்சியர் சீனிவாசன் உட்பட பலர் உள்ளனர்.

# ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் 7,140 தபால் வாக்கு சீட்டுகள் இருப்பு வைப்பு

ஈரோடு, ஏப்.18 -

ஈரோடு மாவட்டத்தில் 85 வயதிற்கு மேற்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகள், ராணுவத்தினர், தேர்தல் பணியாற்றும் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் போலீசார் ஆகியோர் தபால் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

இதன்படி 85 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் வீடு தேடி சென்று தபால் வாக்குகள் பெறப்பட்டன. இதேபோல் தேர்தல் பணியாற்றும் ஊழியர்கள் பயிற்சி முகாம் நடைபெற்ற மையங்களில் தபால் வாக்குகளை செலுத்தினர். தேர்தல் பணியாற்றும் போலீசார் கலெக்டர் அலுவலகத்தில் தபால் வாக்குகளை செலுத்தினர்.

பதிவான தபால் வாக்குகள் அனைத்தும் ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் உள்ள அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் கலெக்டர் அலுவலகத்தில் உள்ள பாதுகாப்பு அறையில் இருப்பு வைக்கப்பட்டுள்ள தபால் வாக்குகள் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல் பணியாற்றும் அரசு ஊழியர்களிடம் பயிற்சி மையத்தில் இருந்து 4, 268 தபால் வாக்குகள் சேகரிக்கப்பட்டுள்ளது. போலீசார் மற்றும் கலெக்டர் அலுவலகத்தில் தேர்தல் பணியாற்றும் ஊழியர்கள் 2, 866. விருதுநகர் மாவட்டத்தில் இருந்து 6 தபால் வாக்குகளும், ராணுவத்தினர் 8 தபால் வாக்குகள் என 7,140 தபால் வாக்குகள் பதிவாகி இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

டி-20 உலகக் கோப்பை அணியில் இடம்பெற

# ஹர்திக் பாண்டியாவுக்கு பி.சி.சி.ஐ. திடீர் உத்தரவு



**மும்பை, ஏப். 18-**

டி-20 உலகக் கோப்பை அணியில் இடம் பெற ஹர்திக் பாண்டியாவுக்கு பி.சி.சி.ஐ. கட்டளை போட்டுள்ளது.

**சிக்கலாகவே...**

ஹர்திக் பாண்டியாவுக்கு இந்த ஆண்டு ஐபிஎல் சீசன் சிக்கலாகவே அமைந்துள்ளது. மும்பை அணியின் கேப்டன் பொறுப்பை ஏற்றதன் காரணமாக ரசிகர்களின் கோபத்துக்கு ஆளானார். அதனாலோ என்னவோ அவரால் களத்தில் சிறப்பாக செயல்பட முடியவில்லை. கேப்டனாக முடிவெடுப்பதில் சொதப்பிவரும் அவர், தனிப்பட்ட முறையில் சரியாக பங்களிக்கவில்லை. இந்த சீசனில் 6 போட்டிகளில் 131 ரன்கள் மட்டுமே எடுத்துள்ளார்.

**டோனி அபாரம்...**

பந்துவீச்சிலோ பெரிதாக எதுவும் அவரால் செய்யமுடியவில்லை. சென்னைக்கு எதிரான போட்டியில் கடைசி ஓவரில் ஹர்திக் பாண்டியாவின் பந்துவீச்சை டோனி துவம்சம் செய்ததே அதற்கு சான்று. எனினும், ஆல்ரவுண்டர் என்ற முறையில் வரவிருக்கும் டி20 உலகக் கோப்பையில் இந்திய அணியில் அங்கம் வகிக்கிறார்.

**தேர்வுக்குழு...**

இதனிடையே, டி20 உலகக் கோப்பையில் விளையாடுவதற்காக, ஹர்திக் பாண்டியாவுக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் சில கட்டளைகளை விதித்துள்ளதாக கூறப்படுகிறது. உலகக் கோப்பை தொடர்பாக கடந்த வாரம் மும்பையில் உள்ள பிசிசிஐ தலைமையகத்தில் இந்திய அணி பயிற்சியாளர் ராகுல் டிராவிட், தேர்வுக் குழு தலைவர் அஜித் அகர்கர் மற்றும் கேப்டன் ரோஹித் சர்மா ஆகியோர் ஆலோசனை நடத்தினர்.

**பந்துவீச வேண்டும்...**

ஆலோசனையில் ஹர்திக் பாண்டியா தேர்வு செய்யப்படுவது குறித்து விவாதித்த மூவரும், அவர் உலகக் கோப்பையில் தேர்வு செய்யப்பட வேண்டும் என்றால், அவர் தொடர்ந்து பந்துவீச வேண்டிய அவசியம் உள்ளது என்று தெரிவித்துள்ளனர். ஏனென்றால், நடப்பு சீசனில் இதுவரை பந்துவீசிய 6 போட்டிகளில் மொத்தம் 11 ஓவர்கள் வீசி 132 ரன்கள் வரை விட்டுக்கொடுத்துள்ளார். அவர் பந்துவீச்சில் பெரிய முன்னேற்றம் எதுவும் இல்லை.

**வாய்ப்பளிக்கப்படும்...**

எனவே தான் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் பந்துவீசினால் உலகக் கோப்பையில் வாய்ப்பளிக்கப்படும் என்பதை ராகுல் டிராவிட் மற்றும் ரோஹித் சர்மா இருவரும் ஹர்திக் பாண்டியாவிடம் தெரிவித்துவிட்டதாக முன்னணி செய்தி நிறுவனங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன. ஏற்கெனவே, மும்பை இந்தியன்ஸ் அணியின் கேப்டன்சி தடுமாற்றத்தில் உள்ள ஹர்திக் பாண்டியாவுக்கு, பிசிசிஐயின் புதிய கட்டளை மேலும் நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது குறிப்பித்தக்கது.

# சேலத்தில் இ.பி.எஸ். ரோடு ஷோ

**சேலம். ஏப். 18-**

சேலத்தில் அ.தி.மு.க. தலைவர் எட்ப்பாடி பழனிசாமி ரோடு ஷோ மூலம் வாக்கு சேகரித்தார்.

தமிழகத்தில் கடந்த ஒரு மாதமாக அனல் பறந்த மக்களவைத் தேர்தல் பிரசாரம் நேற்று (ஏப். 17) மாலை 6 மணிக்கு நிறைவடைந்தது. இதையடுத்து, இறுதிக்கட்ட வாக்கு சேகரிப்பில் அரசியல் கட்சிகளின் தலைவர்களும், வேட்பாளர்களும் ஈடுபட்டனர்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மட்டுமின்றி, அரசியல் கட்சிகளின் தலைவர்களும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். இந்த நிலையில், சேலத்தில் ரோடு ஷோ மூலம் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பிரசாரம் செய்தார். ஏற்காடு பிரதான சாலை அஸ்தம்பட்டி சந்திப்பில் இருந்து சேலம் நகரப் பகுதி வரை திறந்த வாகனத்தில் எடப்பாடி பழனிசாமி பிரசாரத்தில் ஈடுபட்டார். சேலம் மக்களவைத் தொகுதி அதிமுக வேட்பாளர் விக்னேஷை ஆதரித்து எடப்பாடி பழனிசாமி வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

## வைரலாகும் ரோகித் வீடியோ

மும்பை அணியின் முன்னாள் கேப்டன் ரோகித் சர்மாவின் விடியோ வைரலாகி வருகிறது. மும்பை அணிக்காக 5 கோப்பையை பெற்று தந்த ரோகித் சர்மா கேப்டன் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டார். கடந்த இரண்டாடுகளாக மும்பை அணி மோசமாக விளையாடி வருகிறது. தற்போது ஹார்திக் பாண்டியா கேப்டனாக இருக்கிறார். மும்பை இந்தியன்ஸ் மற்றும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் விளையாடிய போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் 20 ரன்கள் வித்தியாசத்தில் மும்பையை வீழ்த்தி அசத்தியது. இதில் சதமடித்து அசத்தினார் ரோகித்.

36 வயதான ரோகித் சர்மா டி20 உலகக் கோப்பைக்கு இந்திய அணியின் கேப்டனாக செயல்படுவார். தற்போது போட்டிக்காக பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். ரோகித் சர்மா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தனது பேட்டிற்கு ஆசையாக ஸ்டிக்கர் ஒட்டும் விடியோவை வெளியிட்டுளார். அந்த விடியோவில், "சிகிச்சை" எனத் தலைப்பிட்டுள்ளார். ரசிகர்கள் மத்தியில் வைரலாகி வருகிறது. ரசிகர்கள் ரோகித்தை 'குழந்தை மனசுக்காரன்' என கமெண்டுகளில் புகழ்ந்து வருகிறார்கள். புள்ளிப் பட்டியலில் 8வது இடத்தில் இருக்கும் மும்பை இந்தியன்ஸ் அணி 7வது இடத்தில் இருக்கும் பஞ்சாப் அணியுடன் சண்டிகரில் மோதுகிறது.

## ரன் அடிக்காமலே ஜெயித்த ஆவேஷ் கான்

ஐபிஎல் போட்டியின் 31-ஆவது ஆட்டத்தில் ராஜஸ்தான் ராயல்ஸ் 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸை செவ்வாய்க்கிழமை 'த்ரில்' வெற்றி கண்டது. முதலில் கொல்கத்தா 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 223 ரன்கள் எடுக்க, ராஜஸ்தான் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 224 ரன்கள் சேர்த்து வென்றது. 9வது விக்கெட்டாக 17.4ஆவது ஓவரில் களமிறங்கினார் ஆவேஷ் கான். ஒரு பந்து கூட விளையாடாமல் வெற்றிக்கு காரணமாக அமைந்தார்.

2023இல் லக்னோ அணியில் இது மாதிரி ஒரு முறை கடைசி பந்தில் ரன் அடிக்காமல் பைஸில் வெற்றி பெற்றார். அதன் வெற்றியை ஆக்ரோஷமான விதத்தில் ஹெல்மெட்டை கீழேப்போட்டு கொண்டாடினார். இது அப்போதே வைரலானது. தற்போது இரண்டாவது முறையாக ஒரு ரன்னும் அடிக்காமல் வெற்றிக்கு உதவியுள்ளார். இதனால் ராஜஸ்தான் அணியினர் ஆவேஷ் கானை ஃபினிஷர் என பாராட்டி விடியோ வெளியிட்டுள்ளார்கள். லக்னோ அணியும் பாராட்டி ஜாலியாக பதிவிட்டுள்ளது. இணையத்தில் ரசிகர்களும் ஆவேஷ் கானை புகழ்ந்து வருகிறார்கள். ஆட்ட நாயகன் ஜாஸ் பட்லரை விடவும் ஆவேஷ் கான் இணையத்தில் வைரலாகி வருகிறார்.

# வெற்றிபெறுவோம் என்ற உறுதியுடன் வந்துள்ளேன்

## அசாமில் பிரதமர் மோடி பிரசாரம்

**கவுகாத்தி, ஏப். 18-**

2014ம் ஆண்டு எதிர்பார்ப்புடன் மக்களை சந்திக்க வந்தேன், தற்போது வெற்றிபெறுவோம் என்ற உறுதியுடன் வந்துள்ளேன் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற தேர்தல் நாடு முழுவதும் வரும் 19-ம் தேதி தொடங்கி ஜூன் 1ம் தேதி வரை 7 கட்டங்களாக நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் ஜூன் 4ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது முதல் அரசியல் கட்சிகள் தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றன. தேர்தல் நெருங்கிவரும் நிலையில் ஆளும் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி, காங்கிரஸ் தலைமையிலான இந்தியா கூட்டணி உள்பட பல்வேறு அரசியல் கட்சிகள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இதனிடையே, 14 தொகுதிகளை கொண்ட அசாமில் 3 கட்டங்களாக பாராளுமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. முதற்கட்ட தேர்தல் வரும் 19ம் தேதியும், 2ம் கட்ட தேர்தல் 26ம் தேதியும், 3ம் கட்ட தேர்தல் அடுத்த மாதம் 7ம் தேதியும் நடைபெற உள்ளது. தேர்தல் நெருங்கிவரும் நிலையில் அரசியல் கட்சிகள் தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், அசாம் மாநிலத்தின் நல்பாரி மாவட்டத்தில் பா.ஜ.க. பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில், பிரதமர் மோடி பங்கேற்றார். பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியதாவது, 2014ம் ஆண்டு எதிர்பார்ப்புடன் மக்களை சந்திக்க வந்தேன், 2019ம் ஆண்டு நம்பிக்கையுடன் வந்தேன். தற்போது வெற்றிபெறுவோம் உறுதியுடன் வந்துள்ளேன். கடவுள் ராமரின் பிறந்தநாள் விழா சூரிய திலக நிகழ்ச்சியுடன் 500 ஆண்டுகளுக்கு பிறகு அயோத்தி கோவிலில் கொண்டாடப்பட்டுள்ளது.

அயோத்தில் நடைபெற்ற விழாவில் நாம் பங்கேற்கமுடியவில்லை. ஆனால், தற்போது நமது செல்போனில் உள்ள டார்ச் லைட் விளக்கை ஆன் செய்து விழாவில் நாம் பங்கேற்கேற்போம். எந்தவித பாகுபாடுமின்றி அடுத்த 5 ஆண்டுகளுக்கு மக்களுக்கு இலவச ரேஷன் பொருட்கள் வழங்கப்படும். ஆயிஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ் 70 வயதிற்கு மேற்பட்டோருக்கு 5 லட்ச ரூபாய் மதிப்பிலான இலவச சிகிச்சை அளிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

துப்பாக்கிச்சூடு சம்பவம்:

# சல்மான் கானை நேரில் சந்தித்து உறுதியளித்த முதல்வர் ஏக்நாத்

**மும்பை, ஏப். 18-**

பாலிவுட் நடிகர் சல்மான் கான் வீட்டு முன் துப்பாக்கிச்சூடு நிகழ்வு நடந்த நிலையில், அவரது வீட்டுக்கு மகாராஷ்டிரா முதலமைச்சர் ஏக்நாத் ஷிண்டே நேரில் சென்று பாதுகாப்பு அளிக்கப்படும் என உறுதி அளித்துள்ளார்.

பாலிவுட் நடிகர் சல்மான் கானின் வீடு மும்பை பாந்த்ரா பகுதியில் உள்ள கேலக்சி அடுக்குமாடி குடியிருப்பில் உள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை இருசக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர்கள் 2 பேர் துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றனர். சல்மான் கானுக்கு 'ஒய் பிளஸ்' பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ள நிலையில் துப்பாக்கிச்சூடு சம்பவத்தை தொடர்ந்து அவரது வீட்டு முன் கூடுதல் போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர். அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை கைப்பற்றி போலீசார் ஆய்வு செய்தனர்.

இதற்கிடையே, சல்மான் கான் வீட்டு முன் துப்பாக்கிச்சூடு நடத்திய அடையாளம் தெரியாத நபர்கள் இருவரை போலீசார் கைது செய்தனர். குஜராத்தின் புஜ் பகுதியில் பதுங்கியிருந்த இவர்கள் இருவரையும் போலீசார் கைது செய்துள்ளனர். அவர்கள் எதற்காக துப்பாக்கிச்சூடு நடத்தினர் என்பது குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர். இந்நிலையில், நடிகர் சல்மான் கான் வீட்டுக்கு முதல் மந்திரி ஏக்நாத் ஷிண்டே நேரில் சென்றார். அவர் சல்மான் கான் குடும்பத்தினரை சந்தித்துப் பேசினார். அப்போது சல்மான் கான் குடும்பத்தினருக்கு முழு பாதுகாப்பு தருவதாக ஏக்நாத் ஷிண்டே உறுதி அளித்ததாக கூறப்படுகிறது.

பாரீஸ் ஒலிம்பிக் 2024:

# ஒலிம்பிக் தீப தொடர் ஓட்டம் தொடக்கம்

**பாரீஸ், ஏப். 18-**

பாரீஸ் ஒலிம்பிக் போட்டியை முன்னிட்டு ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டு, ஒலிம்பிக் ஓட்டம் தொடங்கியது.

200 நாடுகள்...

33-வது ஒலிம்பிக் விளையாட்டு போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரீசில் ஜூலை 26-ந்தேதி முதல் ஆகஸ்டு 11-ந்தேதி வரை நடைபெறுகிறது. இதில் 200 நாடுகளைச் சேர்ந்த 10,500-க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். போட்டிக்கான 'கவுண்டவுன்' தொடங்குவதை குறிக்கும் வகையில் ஒலிம்பிக் பிறந்த இடமான கிரீஸ் நாட்டின் ஒலிம்பியாவில் ஒலிம்பிக் தீபம் ஏற்றப்படுவது நெடுங்காலமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

**ஒலிம்பிக் தீபம்...**

அதன்படி பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கான ஒலிம்பிக் தீபம் ஏற்றும் நிகழ்ச்சி ஒலிம்பியாவில் (ஏப்.17) நடைபெற்றது. வழக்கமாக சூரிய ஒளியை குவிலென்சின் மையத்தில் விழச் செய்து, அதில் இருந்து உருவாகும் வெப்பத்தில் இருந்து ஒலிம்பிக் தீபம் ஏற்றப்படும். ஆனால் நேற்று முன்தினம் ஒலிம்பியாவில் மேகமூட்டமாக இருந்ததால் சூரியஒளியை பார்க்க முடியவில்லை. வானிலை குறித்து முன்கூட்டியே கணிக்கப்பட்டு இருந்ததால் அதற்கு ஏற்ப மாற்று ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது.

**தொடர் ஓட்டமாக...**

தொடர்ந்து, கிரேக்கத்தின் பாரம்பரிய உடையணிந்த நடிகை மேரி மினா சூரிய கடவுளை நோக்கி வணங்கி விட்டு அங்கு சிறிய பானையில் எரிந்து கொண்டிருந்த ஜூவாலையில் தீபத்தை ஏற்றினார். அதன் பிறகு ஒலிம்பிக் சாம்பியனான கிரீஸ் துடுப்பு படகு வீரர் ஸ்டீபனோஸ் நிடோஸ்கோஸ் முதல் நபராகவும், தொடர்ந்து பிரான்ஸ் நீச்சல் வீராங்கனை லாரே மனவ்டோவும் சிறிது தூரம் தீபத்தை தொடர் ஓட்டமாக எடுத்துச் சென்றனர்.

**5 ஆயிரம் கி.மீ...**

கிரீஸ் நாடு முழுவதும் 5 ஆயிரம் கிலோமீட்டர் தூரம் தீபம் பயணிக்கிறது. அது முடிந்து வருகிற 26-ந்தேதி பாரீஸ் ஒலிம்பிக் கமிட்டியிடம் தீபம் ஒப்படைக்கப்படும். பின்னர் ஒலிம்பிக் தீபம் பிரான்சுக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு 400 நகரங்களில் தொடர் ஓட்டம் நடைபெறுகிறது. இங்கு ஏறக்குறைய 10 ஆயிரம் பேரின் கைகளில் தீபம் தவழ இருக்கிறது. இறுதியில் தொடக்க விழா நடைபெறும் பாரீசுக்கு கொண்டு வரப்பட்டு அங்குள்ள மெகா கொப்பரையில் தீபம் ஏற்றப்பட்டதும் போட்டி தொடங்கும்.

ஜாஸ் பட்லர் அதிரடி சதம்:

# ராஜஸ்தான் திரில் வெற்றி

**ஜெய்பூர், ஏப். 18-**

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 2 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணி வெற்றி வாகை சூடியது.

**பத்து அணிகள்...**

17வது ஐபிஎல் கிரிக்கெட் திருவிழா மார்ச் 22-ம் தேதி சென்னை சேப்பாக்கதில் தொடங்கி மே 26-ம் தேதி வரை இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெறுகிறது. இதில், சென்னை, பெங்களூரு, மும்பை, கொல்கத்தா, ஐதராபாத், டெல்லி, பஞ்சாப், குஜராத், லக்னோ, ராஜஸ்தான் ஆகிய 10 அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன.

**பந்துவீச்சு தேர்வு...**

இந்நிலையில், 31வது போட்டியில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியும், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் விளையாடின. இதில் டாஸ் வென்ற ராஜஸ்தான் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி பேட்டிங் செய்தது. இதனைத்தொடர்ந்து, கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தொடக்க வீரர்களாக பில் சால்ட் மற்றும் சுனில் நரைன் முதலில் களமிறங்கினர்.

**11 ரன்னில் அவுட்...**

4வது ஓவரில் 10 ரன்களில் ஆவேஷ் கான் பந்தில் பில் சால்ட் ஆட்டமிழந்தார். அடுத்ததாக களமிறங்கிய ஆங்க்ரீஷ் ரகுவன்ஷி 30 ரன்களில் அவுட்டானார். இதையடுத்து நரேனுடன் ஸ்ரேயாஸ் ஐயர் ஜோடி சேர்ந்தார். இதில் ஸ்ரேயாஸ் ஐயர் 11 ரன்னில் அவுட் ஆனார். இதையடுத்து ரசேல் களமிறங்கினார். தொடர்ந்து அதிரடி காட்டி வந்த நரேன் 49 பந்துகளில் சதம் விளாசினார். இதையடுத்து ரிங்கு சிங் மற்றும் வெங்கடேஷ் ஐயர் ஜோடி சேர்ந்தனர்.

**224 ரன்கள் இலக்கு...**

20 ஓவர் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 223 ரன்கள் எடுத்தது கொல்கத்தா நைட் ரைடர்ஸ். ராஜஸ்தான் தரப்பில் அவேஷ் கான், குல்தீப் சென் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இதையடுத்து, அதிகபட்சமாக சுனில் நரைன் 56 பந்துகளில் 109 ரன்கள் விளாசினார். இதன்மூலம் 224 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் களமிறங்கியது. ஜெய்ஸ்வால் மற்றும் சஞ்சு சாம்சன் முதலி ல் களமிறங்கினர். ஜெய்ஸ்வால், 19 ரன்களில் ஆட்டமிழந்தார். கேப்டன் சஞ்சு சாம்சன் 12 ரன்களில் வெளியேறினார். அடுத்து களமிறங்கிய ரியான் பராக் 14 பந்துகளில் 34 ரன்கள் எடுத்தார். இதையடுத்து களமிறங்கிய துருவ் ஜுரேல் (2), அஷ்வின் (8), ஹெட்மயர் (0) ஆகியோர் அடுத்தத்து ஆட்டமிழந்து வெளியேறினர்.




**9 ரன்கள் தேவை...**

கடைசி ஓவரில் 9 ரன்கள் மட்டுமே ராஜஸ்தான் அணியில் வெற்றிக்கு தேவைப்பட்டது. பட்லர் 98 ரன்களுடன் களத்தில் இருந்தார். கடைசி ஓவரின் முதல் பந்தில் சிக்ஸர் விளாசினார். 55 பந்துகளில் சதம் கடந்தார். இருந்தும் அடுத்த 3 பந்துகளில் ரன் ஏதும் எடுக்கவில்லை. 5-வது பந்தில் 2 ரன்கள் எடுக்கப்பட்டது. அதன் மூலம் இரு அணியின் ரன்களும் சமன் ஆனது. கடைசி பந்தில் 1 ரன் எடுத்து ராஜஸ்தான் அணி வெற்றி பெற்றது.

**ராஜஸ்தான் வெற்றி....**

இறுதியில் ராஜஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு தனது இலக்கை கடந்து 2 விக்கெட் வித்தியாசத்தில் திரில் வெற்றிபெற்றது. 224 ரன்களை விளாசிய ராஜஸ்தான் அணி புள்ளி பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. கொல்கத்தா தரப்பில் ரானா, வருண். நரேன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர். இந்த ஆட்டத்தில் அதிகபட்சமாக ஜோஸ் பட்லர் 60 பந்துகளில் 107 ரன்களை விளாசினார்.

# கோவாவில் ரூ.1,400 கோடி மதிப்பில் சொத்துக் காட்டிய பா.ஜ. வேட்பாளர்




**பனாஜி, ஏப். 18-**

கோவாவில் பா.ஜ., சார்பில் போட்டியிடும் பெண் ஒருவர், கணவருடன் சேர்ந்து ரூ.1,400 கோடி மதிப்புள்ள சொத்துகள் உள்ளதாக பிரமாணப் பத்திரத்தில் கூறியுள்ளார்.

தெற்கு கோவா தொகுதியில் பா.ஜ., சார்பில் பல்லவி (49) என்பவர் போட்டியிடுகிறார். இதற்காக அவர், வேட்புமனு தாக்கல் செய்தார். அதனுடன் சொத்து குறித்த பிரமாணப் பத்திரத்தையும் தாக்கல் செய்தார். அதில், கணவருடன் சேர்ந்து தனக்கு ரூ.1,400 கோடி சொத்து உள்ளது என தெரிவித்துள்ளார்.

மேலும் அதில் கூறப்பட்டு உள்ளதாவது: பல்லவிக்கும், கணவர் ஸ்ரீநிவாஸ் டெம்போவுக்கும் கால்பந்து, ரயில் எஸ்டேட், கப்பல் கட்டும் தொழில், கல்வி முதல் சுரங்கம் உள்ளிட்ட துறைகளில் முதலீடு செய்துள்ளோம். பல்லவிக்கு சொந்தமாக ரூ.255.4 கோடி மதிப்பு அசையும் சொத்து உள்ளது. இவரின் அசையா சொத்துகளின் சந்தை மதிப்பு ரூ.28.2 கோடி.

ஸ்ரீநிவாசுக்கு ரூ.994.8 கோடி மதிப்பு அசையும் சொத்து உள்ளது. இவரின் அசையா சொத்தின் சந்தை மதிப்பு ரூ.83.2 கோடி ஆகும். கோவாவில் உள்ள சொத்துகளை தவிர்த்து நாட்டின் பல பகுதிகளிலும் இந்த தம்பதிக்கு சொத்து உள்ளது. இதனைத் தவிர்த்து துபாயில் ரூ.2.5 கோடி மதிப்புள்ள குடியிருப்பும், லண்டனில் ரூ.10 கோடி மதிப்புள்ள குடியிருப்பும் உள்ளது. பல்லவியிடம் ரூ.5.7 கோடி மதிப்பு தங்கம் உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் 33-வது முறை நீட்டிப்பு

**சென்னை, ஏப். 18-**

செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் 33-வது முறையாக நீட்டிக்கப்பட்டள்ளது. வரும் 22ம் தேதி நேரில் ஆஜர்படுத்த நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சட்டவிரோத பண பரிமாற்ற தடை சட்டத்தின் கீழ் அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி புழல் சிறையில் அடைக்கப்பட்டு உள்ளார். இதையடுத்து ஜாமீன் கோரி செந்தில்பாலாஜி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம், மற்றும் சென்னை ஐகோர்ட்டு தள்ளுபடி செய்தன. தொடர்ந்து ஜாமீன் கோரி சுப்ரீம் கோர்ட்டில் செந்தில் பாலாஜி மனு தாக்கல் செய்தார். அந்த மனு நிலுவையில் இருந்து வருகிறது.

முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவல் நேற்றுடன் முடிவடைந்த நிலையில், புழல் சிறையிலிருந்து காணொலி மூலம் சென்னை மாவட்ட மூன்றாவது கூடுதல் அமர்வு நீதிமன்ற நீதிபதி டி.வி.ஆனந்த் முன்பாக அவர் ஆஜர்படுத்தப்பட்டார். அப்போது செந்தில் பாலாஜியின் நீதிமன்ற காவலை ஏப்ரல் 22-ம் தேதி வரை நீட்டித்து நீதிபதி உத்தரவிட்டார்.

இதன்மூலம் 33-வது முறையாக அவரது நீதிமன்ற காவல் நீட்டிக்கப்பட்டுள்ளது. சட்டவிரோத பணப்பரிமாற்ற தடை சட்டத்தின் கீழ் அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்ட வழக்கில் வங்கி தொடர்பான சில ஆவணங்களை வழங்கக் கோரி செந்தில் பாலாஜி மனு மீது மீண்டும் வாதிட அனுமதி வழங்கி நீதிபதி உத்தரவிட்டார். மேலும் அமலாக்கத்துறை வழக்கின் அசல் ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்காக செந்தில் பாலாஜியை வரும் 22ம் தேதி பிற்பகலில் நேரில் ஆஜர்படுத்த வேண்டும் என நீதிபதி தெரிவித்துள்ளார்.

3-ம் பாலினத்தவர்கள் குறித்த

# கணக்கெடுப்பு 3 மாதங்களில் முடிக்கப்படும்: தமிழக அரசு

**சென்னை, ஏப். 18-**

கல்வி, வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக, மூன்றாம் பாலினத்தவர்கள் குறித்த கணக்கெடுப்பு பணிகள் 3 மாதங்களில் முடிக்கப்படும் என தமிழ்நாடு அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

கல்வி, வேலைவாய்ப்பில் மூன்றாம் பாலினத்தவர்களுக்கு உரிய இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என மத்திய – மாநில அரசுகளுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவின் அடிப்படையில் மூன்றாம் பாலினத்தவர்களுக்கு உரிய இட ஒதுக்கீடு வழங்கக் கோரி, தூத்துக்குடியைச் சேர்ந்த கிரேஸ் பானு கணேசன் என்ற மூன்றாம் பாலினத்தவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், தமிழ்நாட்டில் மூன்றாம் பாலினத்தவர்கள் குறித்த கணக்கெடுப்பு நடத்த தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட்டிருந்தது. இந்த வழக்கு தலைமை நீதிபதி கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி சத்தியநாராயணா முன்பு நேற்று விசாரணைக்கு வந்த போது, தமிழ்நாடு அரசுத் தரப்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில், மூன்றாம் பாலினத்தவர்கள் குறித்த கணக்கெடுப்பு நடத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், தேர்தல் நடத்தை விதிகள் விலக்கிக் கொள்ளப்பட்ட பின், மூன்று மாதங்களில் இப்பணிகள் முடிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், "கணக்கெடுப்பின் அடிப்படையில் மூன்றாம் பாலினத்தவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக உரிய முடிவை எடுக்க வேண்டும்" என அரசுக்கு உத்தரவிட்டு, விசாரணையை ஜூலை 5ம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

# இருசக்கர வாகனத்தில் சென்று வாக்கு சேகரித்த நடிகை நமிதா


**சென்னை, ஏப். 18-**

இருசக்கர வாகனத்தில் பேரணியாக சென்று நடிகை நமிதா வாக்கு சேகரித்தார்.

பாராளுமன்ற தேர்தல் தமிழகத்தில் நாளை ஒரே கட்டமாக நடைபெறுகிறது. தேர்தலுக்கான பிரசாரம் நேற்று மாலை 6 மணியுடன் நிறைவுப் பெற்றது. இதையொட்டி தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் நேற்று காலை முதலே தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டன. அந்த வகையில், வடசென்னை பாஜக வேட்பாளர் பால் கனகராஜை ஆதரித்து நடிகை நமிதா வியாசர்பாடி பகுதியில் இருசக்கர வாகனத்தில் பேரணியாக சென்று வாக்கு சேகரித்தார். நடிகை நமிதாவுடன் 10-க்கும் மேற்பட்ட இருசக்கர வாகனங்களில் பெண்கள் பங்கேற்றனர்.



**மதுரை பாராளுமன்ற தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் டாக்டர் சரவணனை ஆதரித்து முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜு எம்.எல்.ஏ.வின் ஆலோசனைப்படி மத்திய 4 - ம் பகுதி சார்பில் அதன் பகுதி செயலாளர் ரவிராஜ் தலைமையில் குப்பப்பிள்ளை தோப்பு பள்ளிவாசல் மற்றும் சுப்பிரமணியபுரம் ஆகிய பகுதிகளில் வீடு,வீடாக சென்று அ.தி.மு.க.வினர் இரட்டை இலைக்கு வாக்கு சேகரித்தனர். இதில் நிர்வாகிகள் புதூர் சந்திரன், வட்டச்செயலாளர் சித்திக்அலி, மகேஸ்வரி, பார்த்திபன், ஐடியல் புகழேந்தி, மருதுபாண்டி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.**



● சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் உள்ள அவரது திருவுருவ சிலைக்கு தமிழக அரசு சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார். அருகில் அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, மா.சுப்பிரமணியன், மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா ஆகியோர் உள்ளனர்.

# கோவையில்தான் மத்திய பா.ஜ.க. ஆட்சிக்கு முடிவுரை எழுதவுள்ளோம்

## அமைச்சர் உதயநிதி பிரசாரம்

திருப்பூர், ஏப். 18-

கோவையில்தான் மத்திய பாசிச பா.ஜ.க. ஆட்சிக்கு முடிவுரை எழுதவுள்ளோம் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே உள்ள காரணம்பேட்டையில், கோவை பாராளுமன்ற தொகுதி இன்டியா கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் கணபதி ராஜ்குமாரை ஆதரித்து தமிழ்நாடு விளையாட்டு துறை அமைச்சரும், தி.மு.க. இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது.

இந்தியாவில் காலை உணவு என்ற சிறந்த திட்டத்தை கொண்டு வந்த ஒரே முதலமைச்சர் நமது தமிழ்நாடு முதலமைச்சர் தான். காலையில் சீக்கிரம் வேலைக்குப் போகும் பெற்றோர்கள் குழந்தை சாப்பிட்டானா, இல்லையா என கவலைப்பட்டுக் கொண்டிருந்த நிலையில், தற்போது காலை உணவு மற்றும் கல்வியை தந்து குழந்தைகளின் எதிர்காலத்தை சிறப்பாக்கி கொண்டிருப்பது தான் திராவிட மாடல் அரசு, தமிழ்நாடு முழுவதும் 31 ஆயிரம் அரசு பள்ளிகளில் 18 லட்சம் குழந்தைகள் காலை உணவு திட்டத்தில் பயனடைகின்றனர். இந்த கூட்டத்திற்கு மகளிர் அதிகமாக வந்துள்ளீர்கள். மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் எவ்வளவு பேர் பயனடைந்துள்ளீர்கள். கைகளை தூக்குங்கள். தி.மு.க. ஆட்சிக்கு வரும்போது கொரோனா காலம். அதையெல்லாம் தாண்டி தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடி ஒரு கோடியே 18 லட்சம் மகளிருக்கு உரிமை தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இதனை இன்னும் விரிவுபடுத்தி அனைத்து மகளிருக்கும் உரிமை தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். பிரதமர் மோடியை இனி மோடி என்று கூப்பிட வேண்டாம். நான் செல்ல பெயர் வைத்துள்ளேன் 29 பைசா என்ற படம் பொறித்த அட்டையை காட்டி இதுதான் அந்த பெயர் என்ன காரணம் என்றால், தமிழ்நாடு அரசு வரியாக மத்திய அரசுக்கு 1 ரூபாய் செலுத்தினால் திரும்பத்தருவது 29 பைசா மட்டுமே, ஆனால் பீகார் மாநிலத்திற்கு ஒரு ரூபாய் செலுத்தினால் 7 ரூபாய் தருகிறார்கள். உத்ரப்பிரதேசத்திற்கு 3 ரூபாய் தருகிறார்கள். ஆனால் தமிழகத்திற்கு மட்டும் 29 பைசா தான், இதில் தமிழ்நாடு மேல் தனி பாசம் உள்ளது என்று மோடி மேடைக்கு மேடை பேசுகிறார். கொரோனா வந்த போது வரவில்லை, வெள்ளம் வந்தபோது வரவில்லை. இப்பொழுது தேர்தலுக்கு மட்டும் அடிக்கடி தமிழ்நாடு வருகிறார்.

கொரோனா காலத்தில், விளக்கு பிடியுங்கள், மணி அடியுங்கள் என 29 பைசா மோடி கூறினார். ஆனால் நோயாளிகள் வார்டுக்கே சென்று அவர்களுக்கு தைரியம் சொன்ன ஒரே முதலமைச்சர் இந்தியாவில் ஸ்டாலின் மட்டுமே, ஆனால் தமிழ்நாட்டில் மக்கள் துயரப்படும்போது வராத ஒருவர், ஓட்டு கேட்க மட்டும் வருகிறார். தமிழ்நாட்டில் 22 நாட்கள் பிரசாரத்தை முடித்துவிட்டு கடைசி நாளாக கோயமுத்தூருக்கு வந்துள்ளேன். ஏனென்றால் கோவையில் தான் மத்திய பாசிச பா.ஜ.க. ஆட்சிக்கு முடிவுரை எழுதவுள்ளோம்.

தமிழ்நாட்டு மக்களை பா.ஜ.க.,விடமிருந்து காப்பாற்ற வேண்டும் என்றால் நாளை நடைபெற உள்ள தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் அளிக்கும் ஓட்டு தான், மோடிக்கு வைக்கும் வேட்டு. ஜி.எஸ்.டி வரி குறித்து கேட்ட இளம் பெண்ணை திருப்பூரில் பா.ஜ.க.வினர் தாக்கினர். ஜி.எஸ்.டி. என்பது வரி கிடையாது அது ஒரு வழிப்பறி கொள்ளை. திருப்பூர், கோவை மாவட்டங்களில் உள்ள அனைத்து தொழில்களையும், வணிகர்களையும் சாகடித்தது ஜி.எஸ்.டி. வரிதான்.கல்வி உரிமை முதலில் மாநிலப் பட்டியலில் இருந்தது அ.தி.மு.க. ஆட்சியில் கொஞ்சம் கொஞ்சமாக மத்திய அரசு பட்டியலுக்கு கொண்டு சென்று விட்டனர்.

இவ்வாறு அவர் பேசினார்.



● மதுரை பாராளுமன்ற தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் டாக்டர் சரவணனை ஆதரித்து, பெத்தானியாபுரம் பகுதியில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் திறந்த ஜீப்பில் சென்று தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் இறுதிக்கட்ட பிரச்சாரம் செய்து இரட்டை இலைக்கு வாக்கு சேகரித்தார். இதில் அ.தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### சட்டமன்ற தேர்தலின்போது அளித்த

# வாக்குறுதிகளை தி.மு.க. இதுவரை முழுமையாக நிறைவேற்றவில்லை

## எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு

சென்னை, ஏப். 18-

சட்டமன்ற தேர்தலின் போது அளித்த வாக்குறுதிகளை திமுக, இது வரை முழுமையாக நிறைவேற்றவில்லை என அதிமுக பொதுச் செயலாளரும், தமிழ்நாடு சட்டப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

நாட்டில் பாராளுமன்றத் தேர்தல் மொத்தம் 7 கட்டங்களாக ஏப்ரல் 19-ம் தேதி முதல் ஜூன் 1 வரை நடக்க உள்ளது. பின்னர், வாக்கு எண்ணிக்கை ஜூன் 4-ம் தேதி நடக்க உள்ளது. தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் முதற்கட்டமாக நாளை மறுநாள் 40 தொகுதிகளிலும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளதால், நேற்று மாலை வரை இறுதிகட்ட பிரச்சாரத்தில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தீவிரமாக ஈடுபட்டனர்.

இந்நிலையில், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சேலத்தில் உள்ள தனது இல்லத்தில் இருந்து செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது: சட்டமன்ற தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகளை திமுக, இதுவரை முழுமையாக நிறைவேற்றவில்லை. 10 சதவீதத்துக்கும் குறைவான வாக்குறுதிகள் மட்டும் தான் நிறைவேற்றப்பட்டுள்ளன. தேர்தல் வாக்குறுதிகளில் 98 சதவீதம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக முதலமைச்சர் பச்சை பொய் பேசுகிறார்.

அத்யாவசிய பொருட்கள் விலைக் கடுமையாக உயர்ந்துள்ளது. விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவில்லை. பாஜக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு பெட்ரோல் டீசல் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை குறைந்தும் பெட்ரோல் டீசல் விலையை மத்திய அரசு குறைக்கவில்லை.

கர்நாடகா அரசு மேகதாது அணையை கட்டியே தீருவோம் என கூறுகின்றனர். அதனை பாஜக அரசும் தடுக்கவில்லை. தமிழ்நாடு முதலமைச்சரும் எதிர்த்து குரல் கொடுக்கவில்லை. டெல்டா மாவட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டு பாலைவனம் ஆகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கர்நாடகத்தில் தேசிய கட்சிகள் மாறி மாறி ஆட்சிக்கு வந்தாலும் உச்சநீதிமன்ற தீர்ப்பைக் கூட அமலாக்க மறுக்கின்றனர். தமிழ்நாடு பாதிக்கும் போது அதற்கு தீர்வு காண நாம் சொந்த காலில் நிற்க வேண்டும். பாராளுமன்றத்தில் குரல் கொடுக்க வேண்டும்.

அதிமுகவை அழிக்க யாரும் பிறந்ததில்லை. பொன்விழா கண்ட கட்சி, 30 ஆண்டுகாலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்திருக்கிறோம். அதிக அளவில் தேசிய விருதுகளை பெற்றிருக்கிறோம். அதிமுக என்ற கட்சி இருப்பதால் தான் ஏழைகளுக்கு திட்டங்கள் போய் சேர்ந்துள்ளது. இப்படிப்பட்ட கட்சியை அழிப்பது என்பது கனவில் தான் முடியும். 2011-ம் ஆண்டு தேர்தலில் அதிமுக தேமுதிக கூட்டணிக்கு அமோக வெற்றி கிடைத்தது. அதே அளவுக்கு வெற்றி இந்த பாராளுமன்றத் தேர்தலிலும் கிடைக்கும். தேர்தல் நேரத்தில் தேனீக்களை போல அதிமுக தொண்டர்கள் சுறுசுறுப்பாக பணியாற்ற வேண்டும். இந்த தேர்தலில் அதிமுக கூட்டணி வெற்றி பெறும்" இவ்வாறு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

# அரசியல் தலைவர்களின்...(1-ம் பக்க தொடர்ச்சி)

மக்களவைப் பொதுத் தேர்தலையொட்டி, "தமிழர் உரிமை மீட்போம்; தமிழ் நாடு காப்போம்", "ஒற்றை விரலால் ஓங்கி அடிப்போம்" என்ற தாரக மந்திரத்தை குறிக்கோளாகக் கொண்டு, மத்தியில் தமிழ்நாட்டின் நியாயமான கோரிக்கைகளையும், உரிமைகளையும் வென்றெடுப்பதற்கான முழு அங்கீகாரத்தையும் அதிமுகவிற்கு வழங்க வேண்டும். தேர்தல் அன்று அ.தி.மு.க.வின் சின்னமான 'இரட்டை இலைக்கு வாக்களியுங்கள்' என தெரிவிக்கப்பட்டது.

**நாம் தமிழர் - சீமான்:**

விழுப்புரம், மரக்காணம் பேருந்து நிலையம் எதிரே நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர், "எண்ணற்ற உரிமைகளை இழந்து நிற்கிற என் இனத்தின் மக்கள் சொந்த நிலத்திலேயே உரிமையை இழந்து உணர்வு எழுந்து அடிமையாக நிற்க கூடிய ஒரு தேசிய இனத்தின் மக்கள், நீர் உரிமையை இழந்தோம். பசி இல்லாத தேசம், மக்களின் வறுமை இல்லாத தேசம், மக்களின் வாழ்க்கை தரம் உயர்ந்த நாடு, எல்லாருக்கும் வேலை, அவரவர் வாழ்விடத்திலே, ஆகச்சிறந்த கல்வி அவரவர் வாழ்விடத்திலேயே இதுதான் என்னுடைய கோட்பாடு" இவ்வாறு பேசினார்.

**பாஜக-அண்ணாமலை:**

கோவை கஸ்தூரி நாயக்கன் பாளையத்தில் உள்ள முதியோர் இல்லத்தில் நடந்த நிகழ்ச்சியில் தமிழக பா.ஜ.க. மாநிலத்தலைவர் அண்ணாமலை பங்கேற்றார். அப்போது அவர் பேசுகையில், "என் மண் என் மக்கள் யாத்திரை முடிந்தவுடன் லோக்சபா தேர்தல் வந்து விட்டது. இங்கு போட்டியிடுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

இங்குள்ள முதியோர்களுடன் மாலை நேரத்தில் அமர்ந்து பேச வேண்டும் என கடந்த ஓராண்டாகவே முயற்சிகளை மேற்கொண்டேன். ஆனால், அதற்கு நேரம் கிடைக்கவில்லை.

தேர்தல் பிரசாரம் செய்வதற்கு (நேற்று) கடைசி நாள். அதனால் உங்களை சந்தித்து பேச வேண்டும் என நினைத்தேன். அதற்கான பாக்கியம் கிடைத்துள்ளது" என பேசிக்கொண்டிருக்கும் போதே கண் கலங்கினார். அவரை தேற்றும் வகையில் அங்கிருந்தவர்கள், 'ஜெய் ஸ்ரீராம்' என முழக்கங்களை எழுப்பினர்.

**தேமுதிக - பிரேமலதா விஜயகாந்த்:**

மதுரையில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர் சரவணனை ஆதரித்து, தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பரப்புரையில் ஈடுபட்டார்.

அப்போது அவர் கூறியதாவது, "சித்திரை திருவிழா நேரத்தில் மக்களை சந்திப்பதில் மகிழ்ச்சியாக உள்ளது.

மதுரையில் விமான நிலையத்தை விரிவாக்கம் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். மதுரையை சுற்றியுள்ள நகரங்களுக்கு மின்சார ரயில்கள் அமைக்கப்படும்.

தேர்தலை அலட்சியம் செய்யாமல் மக்கள் வாக்களிக்க வேண்டும். வேட்பாளர் சரவணன் செய்த சேவையை மக்கள் மறந்துவிடக்கூடாது. களத்தில் வந்து மக்களுக்காக சேவை செய்வது இந்த அ.தி.மு.க. கூட்டணி"

இவ்வாறு பேசினார்.

# அமேதி-ரேபரேலி தொகுகளில் எதில் போட்டி?-ராகுல்

காசியாபாத், ஏப்.18-

ராகுல் காந்தியிடம், அமேதி அல்லது ரேபரேலி தொகுதியில் போட்டியிடுவீர்களா? என்று கேட்டதற்கு, இது பா.ஜ.க.வின் கேள்வி. மிக நல்லது என கூறினார்.

பாராளுமன்ற மக்களவை தேர்தல் நாடு முழுவதும் ஏப்ரல் 19-ந்தேதி தொடங்கி, ஜூன் 1-ந் தேதி வரை 7 கட்டங்களாக நடைபெற உள்ளது. வாக்குகள் ஜூன் 4-ந்தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

இதனை தொடர்ந்து, ஆளும் பா.ஜ.க., எதிர்க்கட்சியான இன்டியா கூட்டணி உள்ளிட்ட அரசியல் கட்சிகள் வேட்பாளர் பட்டியலை வெளியிட்டு, தீவிர பிரசார பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், பாராளுமன்ற மக்களவை தேர்தலை முன்னிட்டு, உத்தர பிரதேசத்தின் காசியாபாத் நகரில் நடந்த பத்திரிகையாளர்கள் சந்திப்பில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி நேற்று கலந்து கொண்டு பேசினார். அப்போது செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து பேசினார்.

இதில், வேலைவாய்ப்பின்மை, பணவீக்கம் உள்ளிட்ட விவகாரத்தில் இருந்து திசை திருப்பும் வேலையில் பா.ஜ.க. ஈடுபட்டு வருகிறது என ராகுல் காந்தி கூறினார். அவரிடம், அமேதி அல்லது ரேபரேலி தொகுதியில் போட்டியிடுவீர்களா? என நிருபர்கள் கேள்வி கேட்டனர்.

அதற்கு பதிலளித்த அவர், இது பா.ஜ.க.வின் கேள்வி. மிக நல்லது. எனக்கு என்ன உத்தரவு வருகிறதோ, அதனை நான் பின்பற்றுவேன்.

எங்களுடைய கட்சியில் வேட்பாளர்களை தேர்ந்தெடுக்கும் விசயங்கள் எல்லாம், காங்கிரஸ் தேர்வு குழுவினரால் எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

### தமிழகத்தில் வெப் கேமிராக்கள் மூலம்

# 44,800 வாக்குச்சாவடிகள் தீவிரமாக கண்காணிப்பு

## தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு தகவல்

சென்னை, ஏப். 18-

தமிழகத்தில் இதுவரை ரூ.1,297 கோடி மதிப்பிலான ரொக்கம், தங்கம், வெள்ளி உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு தெரிவித்துள்ளார். மேலும், 44,800 வாக்குச்சாவடிகள் வெப் கேமிராக்கள் மூலம் கண்காணிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் பாராளுமன்ற தேர்தல் நாளை ஒரேகட்டமாக நடைபெற உள்ளது. இதையொட்டி வாக்காளர்களுக்கு பணப்பட்டுவாடா, பரிசு பொருட்கள் கொடுப்பதை தடுக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்தல் பறக்கும் படையினர் சோதனைகளை நடத்தி உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்படும் பணம், பரிசு பொருட்கள் ஆகியவற்றை பறிமுதல் செய்து வருகின்றனர். இந்த நிலையில், தேர்தலையொட்டி நடைபெற்ற சோதனையில் தமிழ்நாட்டில் இதுவரை ரூ.1,297 கோடி பணம், தங்கம், பொருட்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு தெரிவித்துள்ளார்.

தலைமைச்செயலகத்தில் செய்தியாளர்களை சந்தித்த அவர், ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் 65 சதவீத வாக்குச்சாவடிகள் வெப் கேமரா முறையில் கண்காணிக்கப்பட உள்ளதாக கூறினார். இது குறித்து அவர் தெரிவிக்கையில்., தமிழகத்தில் 44,800 ஓட்டுச்சாவடிகள் வெப் கேமரா முறையில் கண்காணிக்கப்பட உள்ளது. நாட்டில் தமிழகத்தில் மட்டுமே மிக அமைதியாக தேர்தல் நடக்கிறது. மக்கள் அனைவரும் தவறாமல் ஓட்டளிக்க வேண்டும். தேர்தல் பணியில் ஈடுபடுபவர்கள் இன்று (ஏப்.18) வரை தபால் ஓட்டு செலுத்தலாம். தமிழகத்தில் இதுவரை ரூ.1,297 கோடி மதிப்பிலான ரொக்கம், தங்கம், வெள்ளி உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மக்களின் ஒவ்வொரு ஓட்டும் ஜனநாயகத்திற்கு மிகவும் முக்கியம். மக்கள் 100 சதவீதம் ஓட்டளிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். தேர்தல் பணியில் ஈடுபடுபவர்கள் சிறை கண்காணிப்பாளரிடம் அனுமதி பெற்று இன்று மாலை 6 மணி வரை தபால் ஓட்டு அளிக்கலாம். வாக்காளர் அடையாள அட்டை எண் மூலம் ஓட்டுச்சாவடி விவரங்களை அறியலாம். ஓட்டுச்சாவடி விவரங்களை அறிய இணையதளத்தை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. electoralsearch.eci.gov.in என்ற இணையதளம் மூலம் ஓட்டுச்சாவடி விவரங்களை அறியலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.



● மதுரை பாராளுமன்ற தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் டாக்டர் சரவணனை ஆதரித்து, விராட்டிபத்து, கோச்சடை உள்ளிட்ட பகுதிகளில் திறந்த ஜீப்பில் சென்று அ.தி.மு.க. அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக்கூறி முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. இறுதிக்கட்ட பிரச்சாரம் செய்து இரட்டை இலைக்கு வாக்கு சேகரித்தார். இதில் நிர்வாகிகள் எம்.எஸ்.பாண்டியன், கே.ஏ.கே.முகில், பகுதி செயலாளர்கள் முத்துவேல், பைக்காரா கருப்பசாமி, கவுன்சிலர் பி.கே.எம்.மாரிமுத்து, பழங்காநத்தம் ராஜாராம், வக்கீல் பாலமுருகன், சி.ஆர்.கதிரவன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.